Paul Bakers
Specialists in Egg & Eggless Cakes for all occasions
Also Bread, Baps, Rolls, etc.
CALL 020 8813 8322
SOUTHALL 020 8574 8388
32, SOUTH ROAD, / 143, NORWOOD ROAD
ALSO IN FELTHAM & ISLEWORTH

FREE இலவசம்
The UDHAYAN
# உதயன்
Estd. 1996
UK's No.1 National Tamil Newspaper

Diamond Palace
Mithus Jewellery
Tooting 020 87675333 76 High Street SW17
Croydon 02086831756 322 London Road

e-mail: thelondon@udhayan.freeserve.co.uk
UN 50 July/Aug 2006
For News: 020 8279 0354

# செப்ரம்பரில் புதிய போக்குவரத்து விதி

# 12 வயதிற்குட்பட்டோருக்கு ஏற்ற கார் இருக்கைகள் அவசியம்



12 வயதுக்கு உட்பட்ட சிறார்களுக்கு முன்னிருக்கையானாலும் பின்னிருக்கையானாலும் சிறுவர்களுக்கான தகுந்த கார் இருக்கைகளும் பாதுகாப்புப் பட்டியும் அணிவது அவசியமாகும். இப்புதிய விதிமுறை இவ்வாண்டு செப்ரம்பர் 18 முதல் அமுலுக்கு வருகிறது.



# இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த புலம்பெயர்ந்தோரால் பங்களிக்க முடியும்

## லண்டனில் சர்வதேச மனித உரிமை அமைப்புகளின் மாநாடு

ஜனநாயகம் மனித உரிமைகளுடன் கூடிய சமாதானத்தை ஏற்படுத்த புலம்பெயர்ந்தவர்களால் பங்களிக்க முடியும் என சர்வதேச மனித உரிமை அமைப்புகள் தெரிவிக்கின்றன. இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்றை பிரித்தானியாவை மையமாகக் கொண்டு இயங்கும் சர்வதேச மன்னிப்புச்சபையும் (Amnesty International), அமெரிக்காவை மையமாகக் கொண்டு இயங்கும் மனித உரிமை கண்காணிப்பு அமைப்பும் (Human Rights Warch) இணைந்து ஏற்பாடு

Continued page 2

RIGHT PRICE
TRADE CASH & CARRY
((((( Many Opening Offers )))))
UNIT 8 WHITBY AVENUE PARK ROYAL INDUSTRIAL ESTATE LONDON NW10 7SF
CHOCOLATES, DRINKS, BEER, RIZLA, STATIONERY, TOILETERIES, TOYS
TEL:020 3188 3005 FAX:020 3188 3006

KV Builders & Contractors
Roofing
25 Years Experience.
100% Guaranteed Work
Call Kulveer:
020 8570 7152
07932 500 777



A1 Auto Centres
TYRES ALLOYS EXHAUSTS SHOCKS BATTERIES BRAKES SERVICING
State of the art 4 wheel electronic alignment
Aloy Wheels
Brake Pads
Come in for a winter check
Best Deal in Town
Powerflow Stainess Steel exhaust system for any car
Next to Morrisons 0208 204 6868
Bowman Trading Estate, West Morland Rd, NW9

TMC Wholesale
We gurrantee to beat all other wholesalers and cash & carry prices
Hardware, Stationery, Household, D.I.Y, Electrical, Kitchenware
1,000's of £1.00 lines in stock - strictly wholesale
Tel: 020 8803 5678 Fax: 020 8803 5656
Unit 5 H Nobel Road, Eley Estate, Edmonton, London, N18 3BH
Opening Hours: Mon - Fri 9.00am - 7pm Sun 9.00am - 2.00pm
E.mail: tmcwholesale@hotmail.com

BEJAY'S
ICE CREAM AND LOLLIPOPS
Discounted Ice Cream Walls, Nestle, Treats, Cadbury, Mars and Many OtherBrands
Delivered 7 Days A Week Resturant & Shop Etc
Wall's
61 - 65 GRANGEWOOD ST EASTHAM LONDON E6 1HB
TEL: 020 8471 9405
FAX: 020 8472 3406
WHOLESALE SUPPLIER FOR LEADING ICE CREAM MANUFACTURERS

MIDDX TYRES LTD
NEW, PART WORN & REMOULDS MOT PREPERATIONS, STEERING
020 8813 91 54 / 84
EXHAUSTS, WHEELS, SUSPENSION, 4 WHEEL ALIGNMENTS, BRAKES
41 - 43 The Green, Southall, Middx
WWW.MIDDXTYRESLTD.COM



R&J HEATING & PLUMBING TRADE LTD
BRISTAN ARMITAGE HERITAGE AQUALISA
Complete Bath Suite £199* Only
(Includes WC, Basin&Pedestal, Steel Bath, Mixer Taps, Bath Waste)
Many Other Special Offers In-store
Call us on 0208 538 7722
Address:
Unit 3, Derby Road Ind Estate
Derby Road, Hounslow
Middx, TW3 3UH
Tel: 0208 538 7722 / Fax: 0208 538 7733
* Price Includes VAT

SALOM®
FOOD PRODUCTS
Tried the rest - now try best newly. At your local shop Salom
இலங்கை, இந்திய உணவுப்பொருட்கள் தரமாக, சுவையாக வேண்டுமா ஷாலம் பூட்
1000 பவுணுக்கு கொள்வனவு செய்தால் 10 வீத விலைக் கழிவு உண்டு.
Look for Salom, not find them in local shop
Call Us: 020 8908 9292 -0783 222 0687
we will tell you the names for traders call us for delivery

IDEAL GLAZING
WITH OVER 20 YEARS EXPERIENCE
Manufacturers & Installers of uPVC and Aluminium
FOR FREE ESTIMATE CALL
020 8574 8342
Fax: 020 8843 1903
IDEAL GLAZING (EURO) LTD
29 The Green, Southall
Middlesex, UB2 4AN



பிரித்தானியத் தமிழர்களின் செய்திப் பத்திரிகை

**உதயன்**

உண்மை ! நடுநிலமை ! மக்கள் நலன் !

1997 முதல் அதிக பிரதிகளுடன் பரந்த விநியோகத்தைக் கொண்டு வெளிவரும் தமிழ் மக்களின் ஒரே சமூகப் பத்திரிகை.

தொடர்புகளுக்கு :
UDHAYAN
P O Box 35806
London, E11 3JX, UK
Tel : 020 8279 0354

ஆசிரியர் குழு:
தலைமை நிருபர்:
த ஜெயபாலன்
செய்தி ஆய்வு:
ரி கொன்ஸ்ரன்ரைன்
விளம்பரப் பொறுப்பாளர்:
த புஸ்பலிங்கம்

நிருபர்கள்:
கே அரவிந்தன் (இலண்டன்)
பொன் சிவகுமார் (இலண்டன்)
கா சாந்தி (இலண்டன்)
கே பாலன் (ஐரோப்பா)
வி அருள் (கனடா)
இ சுரேஸ் (கனடா)

உதயன் பத்திரிகை GNM(PVT) LTD இனால் மாதாந்தம் வெளியிடப்பட்டு வருகிறது. இதில் வெளிவரும் கருத்துக்கள் எப்பொழுதும் உதயன் பத்திரிகையினதோ அல்லது வெளியீட்டாளர்களினதோ கருத்துக்களாக இருக்கும் என்பதில்லை. இப்பத்திரிகையில் உள்ள செய்திகள் உண்மையான தகவல்மூலங்களில் இருந்து பெறப்பட்ட சரியான தகவல்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் பிரசுரிக்கப்பட்டு உள்ளது. இருப்பினும் இதில் வரும் தவறுகளுக்கு வெளியீட்டாளர்கள் பொறுப்பல்ல.

# 10,000 பவுண் பெறுமதியான பொருட்களை அழிக்க வெம்பிளி தமிழ் கடைக்கு நீதிமன்ற உத்தரவு

10,000 பவுண் பெறுமதியான படப் பிரதிகளையும் பிரதி பண்ணும் சாதனங்களையும் அழிக்கும்படி வெம்பிளியில் உள்ள தமிழ் வர்த்தகருக்கு நிதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மே 16ல் பிறன்ட் மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் ரட்ணசிங்கம் இதயராஜா (30) என்ற வர்த்தகருக்கு எதிராகவே இத்தீர்ப்பு வழங்கப்பட்டு உள்ளது. மேலும் 150 மணித்தியாலங்கள் சமூக சேவையில் ஈடுபடுமாறும் நீதிமன்ற உத்தரவில் பணிக்கப்பட்டு உள்ளது. இவர் மீது Video Recording Act 1984, the Trade Mark Act 1994 ஆகிய சட்டங்களின் கீழ் 7 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தது. கிறீன்போர்ட்டைச் சேர்ந்த இதயராஜா தனது குற்றங்களை ஒப்புக்கொண்டார்.

வர்த்தகக் கட்டுப்பாட்டுப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் செப்ரம்பர் 5 2004ல் ஈலிங் றோட்டில் இருந்த இதயராஜாவின் ஹரினி டிஜிட்டல் வீடியோ அன்ட் போட்டோ என்ற நிறுவனத்தை முற்றுகையிட்டு சோதணை நடத்தியபோது ஆயிரக்கணக்கான வீடியோ மற்றும் டிவிடி பிரதிகள் கைப்பற்றப்பட்டது. 2,307 வீடியோ கசற்கள், 940 டிவிடிக்கள், 23 விடியோ ரக்கோடர்கள், 5 டிவிடி ரக்கோடர்கள் என்பன கைப்பற்றப்பட்டது.

திருட்டுப் படப் பிரதிகள், பிரித்தானிய அரசால் வகைப்படுத்தப்படாத படம் மற்றும் நாடகங்கள் என்பனவற்றை விற்பனை செய்ததற்காக வர்த்தகர்கள் தண்டிக்கப்படுவது வர்த்தக சமூகத்தில் வழமையான நிகழ்வாகவே உள்ளது. இது விடயமாகக் கருத்துத் தெரிவித்த வர்த்தகர் அன்ரன்ராஜா சிறுபான்மைச் சமூகங்கள் தங்கள் மொழிகளில் படங்களை பார்வையிடுவதற்கான ஏனைய வாய்ப்புகள் இங்கில்லை என்றும் அரச விதிப்படி அனுமதி பெறும் பட்சத்தில் அதற்கேற்படும் செலவு மிக உச்சமாக அமையும் அதனை சந்தைப்படுத்துவது என்பது அசாத்தியமானது என்றும் உதயனுக்குத் தெரிவித்தார்.

பல்கலாச்சார சமூகத்தை கொண்டிருக்கும் பிரித்தானிய அரசு வர்த்தகர்களை குற்றவாளிகளாக் குவதற்குப் பதில் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை கையாள முயற்சிப்பது வரவேற்கத்தக்கது எனப் பெயர் குறிப்பிட விரம்பாத மற்றுமொரு வர்த்தகர் உதயனுக்குத் தெரிவித்தார். இது தொடர்பா Tamil Chambers of Commerce நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் கூறினார்.

# தாயகம் சென்ற லண்டன் இளைஞரைக் காணவில்லை

லண்டனில் இருந்து தாயகம் சென்ற இளைஞர் ஒருவர் காணாமல் போயுள்ளார். யூன் நடுப்பகுதியில் தனது பிறப்பிடமான மட்டக்களப்பிற்குச் சென்ற அமுதன் என்ற இளைஞரே இவ்வாறு காணாமல் போயுள்ளார். தீபம் தொலைக்காட்சியின் வர்த்தகப் பிரிவில் சில ஆண்டுகள் பணியாற்றிய இவர் அண்மையிலே பதிவுத் திருமணமும் செய்து கொண்டார். இவர் காணாமல் போனது பற்றி தீபம் தொலைக்காட்சி மௌனமாகவே உள்ளது. அமுதன் திருமணத்திற்காக தாயகம் சென்றுள்ளதாகவும் யூலை 15ல் அவர் மீண்டும் கலையகத்திற்கு திரும்ப வேண்டும் எனவும் தீபம் நிர்வாகம் கூறியதாக இணையத் தளம் ஒன்று செய்தி வெளியிட்டு உள்ளது.

பிரித்தானியப் பிரஜையான இவர் தமிழ் அலைகள் என்ற இணையத் தளத்தை நடத்தி மட்டுநகர் செய்திகளை வெளியிட்டு வந்ததாக அவரது நண்பர்கள் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவர் யாரால் எதற்காக கடத்தப்பட்டார் என்பது தொடர்ந்தும் மர்மமாகவே உள்ளது. இவருக்கு லண்டனில் ஒரு சகோதரியும் உள்ளார். ஆனால் அவருடன் தொடர்பு கொள்ள எடுத்த முயற்சி பலனளிக்கவில்லை. இவருடன் இவருடைய தாயும் கடத்தப்பட்டுள்ளதாக ஒரு செய்தி வெளிவந்துள்ளது. இதற்கிடையே தீபம் தொலைக்காட்சியில் அமுதனுடைய இடத்திற்கு புதிய ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இலங்கைக்கு செல்லும் புலம்பெயர்ந்தவர்கள் நிலமைகளைக் கருத்தில் எடுத்து மேலதிக கவனமெடுக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

# ஹென்டனில் பாரிய தீ

கட்டப்பட்டுக் கொண்டிருந்த கட்டடத் தொகுதி தீப்பற்றியதைத் தொடர்ந்து ஹென்டன் பொலிஸ் பயிற்சிக் கல்லூரி, பொலிஸ் நிலையம், மாணவர் விடுதி மற்றும் சில விடுகளில் இருந்து 2,500 வரையானோர் வெளியேற்றப்பட்டனர். யூலை 13 மதியம் ஏற்பட்ட இத்தீயினால் மாணவர்களின் தங்கு விடுதி மோசமாக சேதமடைந்தது. 576 மாணவர்கள் தங்கக் கூடிய இவ்விடுதியில் பட்டமளிப்பு முடிவடைந்திருந்ததால் மாணவர்கள் வெளியேறி இருந்ததாக மிடில்செக்ஸ் பல்கலைக் கழகம் தெரிவித்துள்ளது. அப்போது 150 மாணவர்களே அங்கு தங்கியிருந்தனர். இவ்விபத்தில் அதிஸ்டவசமாக யாருக்கும் உயிராபத்து ஏற்படவில்லை. இது தொடர்பான விசாரணைகள் நடைபெற்று வருகிறது.

## பொலிஸ் செய்தி: ஈஸ்ட்ஹாம் இளைஞர் கொலை தொடர்பாக சிலாபத்தில் தமிழ் ளைஞர் கைது

லண்டன் ஈஸ்ஹாமில் ஒரு தமிழ் இளைஞரைக் கொலை செய்து மற்றொருவரை கொல்ல முயன்றார் என்று குற்றம் சாட்டப்பட்ட நிலையில் தப்பி இலங்கையில் வாழ்ந்து வந்தார் எனக்கூறப்படும் சிவப்பிரகாசம் ராஜேஸ்கண்ணா சிலாபம் பகுதியில் வைத்துக் கைதுசெய்யப்பட்டார். கொழும்பு பொலிஸ் பகுதியில் அமைந்துள்ள சர்வதேச இன்டர்போல் பிரிவைச் சேர்ந்த பொலிசாரே சிலாபத்துக்குச் ராஜேஸ்கண்ணாவைச் சென்று கைது செய்தனர். இவ்விளைஞர் கொழும்பு மேல் நீதிமன்றில் நீதிபதி உபாலி அபேவர்த்தன முன்பு ஆஜர் செய்யப்பட்டார். இவரை எதிர்வரும் யூலை 23 வரை தடுத்து வைக்கும்படி நீதிபதி உத்தரவிட்டார்.

லண்டனில் 2004ம் ஆண்டு ஜனவரி 12 மகேஸ்வரன் (மகி) கணேசன் என்ற இளைஞரை மேலும் 12 நபர்களுடன் சேர்ந்து கிரிக்கெட் பற்றால் அடித்துக் கொலை செய்தார் என்றும் 2003ம் ஆண்டு ஒக்ரோபர் 10 எம் மணிராஜ் என்பவரைத் தாக்கிக் கொலை செய்ய முயன்றார் என்றும் இவர் மீது குற்றங்கள் பதிவு செய்யப்பட்டு உள்ளது. லண்டன் போ வீதி நீதிமன்றில் இவர் மீதான வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருக்கின்றது. இந்நிலையில் லண்டனில் இருந்து தப்பி சிலாபத்தில் தங்கியிருந்த வேளையில் இன்டர்போல் வழிகாட்டலில் ராஜேஸ்கண்ணா கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவ தினம் இரவு ஈஸ்ட்ஹாம் பிரியா ரெஸ்ரோறன்ரில் சாப்பிட்டு விட்டு Heigham Roadல் உள்ள தனது வீட்டுக்கு சென்றுகொண்டிருக்கையில் பொல்லுக் கட்டைகள், சுத்தியல், இரும்புக் கம்பிகளால் மகேஸ்வரன் தாக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பொங்கல் தினத்தன்று உயிரிழந்தார். தாக்குதலில் பயன்படுத்தப்பட்ட சில ஆயுதங்களை பொலிஸார் மீட்டனர். இக்கொலை தொடர்பாக 2004 ஜனவரி 24ல் கட்பொட்செயரில் இளைஞர்கள் தங்கியிருந்த 3 வீடுகள் சோதணையிடப்பட்டு இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

செப்ரம்பர் 2004ல் மகேஸ்வரனின் கொலை தொடர்பாக ஓல்ட் பெயிலியில் ஒருவர் மீது குற்றம் பதிவுசெய்யப்பட்டது. மேலும் இரு சந்தேகநபர்களை இலங்கையிலிருந்து நாடுகடத்தும் ஒழுங்குகளுக்கு உத்தரவிடப்பட்டது. கடந்த இரண்டு ஆண்டுகளாக இக்கொலை விசாரணைகள் பூர்த்தியாகாமல் தொடர்கிறது. மேலும் நான்கு தமிழர்களின் கொலை வழக்குகள் இன்னமும் தீர்க்கப்படாமல் இருப்பது குறிப்பிடத்தக்கது.

Continued page

செய்துள்ளன. இலங்கை இனப்பிரச்சினைக்கான சமாதானத் தீர்வில் புலம்பெயர்ந்தவர்களையும் ஈடுபடுத்தும் முதலாவது நடவடிக்கயாக இது அமைந்துள்ளது. ஒகஸ்ட் 5ல் இடம்பெவுள்ள இந்நிகழ்வில் பேரசிரியர் Philip Alston இன் UN Special Rapporteur on Extrajudicial, Summary or Arbitrary Executions அறிக்கை தமிழிலும் சிங்களத்திலும் வெளியிடப்பட உள்து. இக்கலந்துரையாடல் Amnesty International Human Rights Action Centreல் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

**SHOP 4 SALE**

- Lottery
- Paypoint
- Bus Pass
- Off License & Grossery
- Renewable Lease
- 11 Years to run

Call: 020 8961 9675
Mobile: 079 5695 9536
079 3264 8711

**HEMI'S PARTY SHOP**
17, Station Parade, Northolt Rd,
South Harrow, HA2 8 HB
(Opposite Netto)
Tel : 020 8869 0355
Balloons, Helium Hire,
Banners, Cakes, Photo
Balloons, Balloon Decorating
Service for any Occasion.

**Business For Sale**
Off-licences & Groceries
On Harrow Road,
Wembley
5 Min to Wembley
Stadium
Takings of £4000pw
Asking Price £60,000
Tel - 0208 900 9011
07958 030 599

**SAGAR CERAMICS**
TILES & BATHROOM
NEW STORE OPENING OFFER
ROCA. BRISTAN.GROHE.
IDEAL STANDARD,
TYWFORD.KUDOS
OPEN 7 DAYS A WEEK
549Pinner Road, Nort Harrow,Middx,HA2 6EQ
Tel : 02088631400
Mbl: 0790556675, Fax:02084242234
E:sagarceramics@btconnect.com

**Restaurant FOR SALE**
In Queensbury
90 Seats
Double shop
2 bed flat above
8 years renewable lease
rent £27,000 pa
160K·ono
07890990640

**KERALA AYURVEDA**
In its purest form now at Southall and Wembley




*Are you suffering from any ofthe following Chronic/ Acute Disease?*

ARTHRITIS | PSORIASIS
SPONDYLITIS | MIGRAIND
FROZEN SHOULDER | STRESS&STRAIN
SLIP DISC | PILES
RHEUMATISM | OBESITY
MUSCLE PAINS | SINUSITIS
JOINT PAINS | ECZEMA
DEPRESSION | INSOMNIA

*Kerala's age-old Ayurvedic Panchakarma treatments are veryeffective fortreating such diseases. We have established an Ayurvedic Centre in Kerala's traditionalway at the following address to undertake these treatments forthe suffering people at London and are manned by well-qualified & experienced Ayurvedic Doctors and Ayurvedic Panchkarma technicians from Kerala, India.*

**NACS Kerala Ayurveda**
Also we provide Ayurvedic Health Rejuvenation treatments through traditional medicated oil massages, steam bath etec and beauty therapies using herbal mixtures.

CALL FOR APPOINTMENT AND FREE CONSULTATION
8 Grand Parade, Forty Ave, Wembley
Tel: 020 8908 4666
07866 687 216

CALL FOR APPOINTMENT AND FREE CONSULTATION
60 King St, Southall, MiddlesexUB2 4DB
Tel: 020 8571 9111
07958 539658

Website: KeralaAyurveda.co.uk/santhigramAyurveda.com Email: nacsayurveda@lycos.co.uy

# காரை வெல்பெயர் சொசைட்டியும் அதிருப்தியாளர்களும் கூட்டத்தில் கூச்சலும் குழப்பமும்

செய்தித் தொகுப்பு: த ஜெயபாலன்



காரைநகர் Karainagar Welfare Society (K.W.S) யின் கடந்தகால நடவடிக் கைகளில் அதிருப்தியுற்ற வர்கள் அது பற்றி ஆராய்வதற்கான பொதுக் கூட்டம் ஒன்றை யூன் 11 ஏற்பாட செய்திருந்தனர். Wembly High Technology College மண்டபத்தில் இடம்பெற்ற இக்கூட்டம் கூச்சல் குழப்பம் காரணமாக இடைநிறுத்தப்பட்டது.

இக்கூட்டத்திற்கு காரை Welfare Societyயின் செயற் குழு உறுப்பினர்களும் அழைக்கப்பட்டு இருந்த னர். கூட்டத்திற்கு குழந் தைகளும் பெண்களும் என பலர் வந்திருந்தனர். பலரதும் வேண்டுகோளுக்கு இணங்க கூட்டத்தை குமார், பேபி ஆகியோர் ஒழுங்கு செய்திருந்தனர். (தொடர்ச்சி 4ம் பக்கம்)

காரை வெல்பெயர் சொசைட்டியை முன்னேறிச் செல்ல புதிய யோசணைகளை ஆலோசிக்கும் கூட்டம் குமாரின் உரையுடன் ஆரம்பமாகியது. குமார் பேசும் போது நாம் K.W.S இற்கு எதிராகவோ அல்லது புதிய ஒரு அமைப்பாக

NOKIA AUTHORISED SERVICE CENTRE
[redacted]
orange
MANY MORE OFFERS IN-STORE / Ask for T&Cs / Early Cashback
[redacted]

+44(0) 208 33 56780
WWW.SUNTVUK.COM

scenic Tours and Travel
Special Fares to
Bangalore | Bombay
Chennai | Calcutta
Colombo | Delhi
Hyderabad | Trivandrum
Your One Stop Shop For Low Cost Flights And Hotels
542 Kingsbury High Road, London NW9 9HH
Tel: 020 8204 9222
E-mail: info@scenictoursandtravel.com
www.scenictoursandtravel.com

Sarna & Sons
Jewellers Limited
95 The Broadway, Southhall
Middlesex UB1 1LN
T: 020 8893 5520 / 5533
F: 020 8795 0824

Champers Wines CASH & CARRY
Suppliers of Wines, Beers and Spirits
Wide range of product available
at very Competitive Prices
For further details contact
Sales on Tel: 020 8961 2889
Fax: 020 8963 0989
Unit 11, Cumberland Avenue, Park Royal, London NW10 7RT
We Accept All Major Credit Cards


Promet Technology Ltd.
Architectural and Structural Steelwork
Call us on:
020 8965 0500
or Fax:
020 8965 3030

### பேரக்குழந்தையுடன் தாத்தா பாட்டியின் இறுதி அஞ்சலி

# தன்னைப் பெற்றவர்களையும் தான் பெற்றவளையும் ஒரே நேரத்தில் இழந்த இளம் தாய்

தென் மேற்கு விம்பிள்டனில் உள்ள நியூஸ் ஏஜென்டில் இடம்பெற்ற தீ விபத்தில் பலியான மூவரினதும் இறுதிக் கிரியைகள் சவுத் லண்டன் கிரிமற்றேரியத்தில் நடைபெற்றது. சில தினங்களுக்கு முன் தனது 77வது பிறந்த தினத்தை கொண்டாடிய வேலுப்பிள்ளை சிவஞானம் (77) அவரது மனைவி தனலக்ஸ்மி சிவஞானம் இவர்களது இரண்டே வயதேயான செல்வி அக்ஷனா ரவீந்திரன் ஆகியோரினது இறுதி அஞ்சலி யூலை 9ல் ஸ்ரதம் வலியில் இடம்பெற்றது.

இறுதி அஞ்சலி நிகழ்வில் நூற்க்கணக்கான உறவினர் நண்பரகள் கலந்து கொண்டனர். விம்பிஸ்டன் பொலிஸாரும், தீயணைப்பு படைப் பிரிவும் மலர்வளையம்



வைத்து அஞ்சலி செலுத்தியதாக இறுதி அஞ்சலியில் கலந்துகொண்ட உதயன் செய்தியாளர் தெரிவித்தார்.

தாத்தா பாட்டியின் உடலைத் தாங்கிய பேழையின் நடுவே அக்ஷனாவின் பேழையும் வைக்கப்பட்டிருந்தது. பேழையின் மீது அவர்களின் சிரித்த முகங்களுடன் கூடிய உருவப்படங்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது. தன்னைப் பெற்றவர்களையும் தான் பெற்றவளையும் ஒரே நேரத்தில் இழந்த இளம் தாய் கௌரி ரவீந்திரன் மீளமுடியாத வேதனையுடன் கண்ணீர்மல்க பேழைகளின் அருகே இருந்தார். சுமைதாங்கியாக ராசையா ரவீந்திரன் சைவ முறைப்படி இறுதிக் கிரியைகளை மேற்கொண்டிருந்தார். மதியம் இரண்டு மணியளவில் இவர்களது உடல்கள் தகனம் செய்யப்பட்டது.

வவுனியா நெளுங்குளத்தைச் சேர்ந்த திரு சிவஞானம் வவுனியா மகா வித்தியாலயத்தின் அதிபராகவும் கொழும்பு றோயல்கல்லூரியின் ஆசிரியராகவும் இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தங்கள் குழந்தையை காப்பாற்ற முடியாத கையறு நிலையில் உயிர்தப்பிய ரவீந்திரன் தம்பதியருக்கு புகையால் ஏற்பட்ட சுவாசப் பிரச்சினைக்கு சிகிச்சையளிக்கப்பட்டது. அவர்களது மூத்தமகள் ருக்ஷனா அச்சமயம் பள்ளிக்குச் சென்றிருந்ததால் அவர் விபத்தில் இருந்து தப்பித்துக் கொண்டார். ஓல் இங்கிலன்ட் கிளப்பிற்கு அருகில் ஓத்தர் வீதியில் இருந்த ராசையா ரவீந்திரனின் கடையே தீவிபத்துக்கு உள்ளானது. கடைக்கு மேலே இருந்த பிளட்டிலேயே அவர்கள் தங்கி இருந்தனர். வவுனியா கனகராயன் குளத்தைச் சேர்ந்த ரவீந்திரனின் குடும்பத்துடன் திருமதி ரவீந்திரனின் தாய், தந்தையரும் (சிவஞானம் தம்பதிகள்) தங்கி இருந்தனர். ( தொடர்ச்சி 4ம் பக்கம் )



ரவிந்திரன், மாற்று, கனவுகள் நிஜமானால், மண் ஆகிய படங்களை இயக்கிய புதியவனின் (சண்) சகோதரர் என்பது குறிப்பிடத்தக்கது.

**சம்பவத்தின் பின்னணி:**

உதயன் நிருபருக்கு பாதிக்கப்பட்ட குடும்ப உறவுகள் வழங்கிய தகவலின் படி, பிற்பகல் 2:40 மணியளவில் கௌரி ரவீந்திரன் கீழே கடையில் வியாபாரத்தைக் கவனித்துக் கொண்டிருந்தார். ரவீந்திரன் காலையிலேயே கடையைத்

Hyundai's opened London... ...What a wise choice



HYUNDAI
HYUNDAI LONDON 020 8457 6660 Edgware Road, London, NW9 7BN www.hyundai.co.uk/HyundaiLondon

# Karainagar Welfare Society மீது வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள்

1. கடந்த 10 ஆண்டுகளாக கணக்கு காட்டப்படவில்லை. நிதிப் பங்களிப்புச் செய்தவர்கள் குறிப்பாக வர்த்தகர்கள் தாம் கொடுக்கும் பணத்திற்கான வரவு செலவு ஒன்றும் காட்டப்படுவதில்லை என்றும் தாம் வழங்கிய நிதிக்கு என்ன நடக்கிறது என்றும் தெரியாமல் உள்ளனர்.

2. K.W.S செயற்குழு உறுப்பினர்கள் நட்பு உறவுகளின் அடிப்படையிலேயே உதவிகளை மேற்கொள்கின்றனர். உதாரணமாக காரைநகரில் யாழ்ட்டன் கல்லூரி, காரைநகர் இந்துக் கல்லூரி என இரு பெரும் கல்லூரிகள் இருந்த போதும் யாழ்ட்டன் கல்லூரிக்கான அடிப்படை வசதிகளைப் புறக்கணித்தவிட்டு காரைநகர் இந்துக்கல்லூரியின் அதிபர் அறை குளிரூட்டும் சாதனம் பொருத்தப்பட்டுள்ளது. அவ்வதிபர் லண்டன் வரவழைக்கப்பட்டார்.

3. காரை மக்கள் இங்கு சிறு சிறு பிரிவுகளாக பிரிந்தும் சிலர் தனிமைப்படுத்தப்பட்டும் உள்ளனர். அவர்களை ஒன்று சேர்க்க முயற்சிக்காமை. தமிழ் இந்து சமூகத்தின் சாதிய ஒடுக்கு முறைகள் காரைநகரிலும் ஆழ வேரூன்றி உள்ளது. இதனை வேரறுத்து காரைநகர் மக்களை ஒரே சமூகமாக்க காரை வெல்பயர் சொசைட்டி எந்த முயற்சியையும் செய்யவில்லை. ஆனால் இந்த சாதியப் பிளவை ஆழமாக்கும் வகையில் சிலர் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

4. sociaty menbers இடமிருந்து கருத்துக்களை உள்வாங்காமை, மற்றவர்களுடன் கலந்து ஆலோசனை செய்யாமை, புதிய தலைமுறையினரை உள்வாங்காமை போன்றன. இதனால் K.W.S இற்கும் மக்களுக்கும் இடையே இடைவெளி கூடிக்கொண்டு செல்கின்றது. இது மக்களிடமிருந்து காரை வெல்பயர் சொசைட்டியை அந்நியப்பட வைக்கிறது.

5. K.W.S இன் மத்திய குழு உறுப்பினர்கள் ஆண்டாண்டக்கும் தமது பதவிகளை பற்றி வைத்துக் கொண்டுள்ளனர். அவர்கள் புதியவர்களுக்கும் புதிய சிந்தனைகளுக்கும் இடமளிக்க மறுக்கின்றனர்.

2,500க்கும் அதிகமான காரைநகர் மக்கள் லண்டனில் வாழ்ந்த போதும் 70க்கும் குறைவான உறுப்பினர்களே வெல்பெயர் சொசைட்டியில் உறுப்பினர்களாக உள்ளனர். புதியவர்களை உள்வாங்க இவர்கள் எந்த முயற்சியும் எடுக்கவில்லை. விரும்பவும் இல்லை. இவ்வாறான சில குற்றச்சாட்டுகளும் உண்டு.

## தங்கள் மீது பொறாமையினால் பழிபேடுகின்றனர் காரை வெல்பயர் சொசைட்டி தலைவர், செயலாளர்

தலைவர் சுந்தரதாசனும் செயலாளர் சபாரத்தினமும் காரை வெல்பெயர் சொசைட்டியின் மீதான குற்றச்சாட்டுகளை முற்றாக மறுத்துள்ளனர். பெரும்பாலும் அங்கத்தவர்கள் இல்லாத சிலரின் பொய்க் குற்றச்சாட்டுகள் இவையென அவர்கள் இருவரும் உதயனுக்குத் தெரிவித்தனர்.

கணக்கு வழக்குகள் ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் காட்டப்பட்டதாகத் தெரிவித்த செயலாளர் சபாரத்தினம் பொதுக் கூட்டங்களுக்கு இவர்கள் யாரும் வருவதில்லை என்றும் அவற்றில் ஆர்வம்காட்டுவதில்லை என்றும் குற்றம்சாட்டினார்.

காய்க்கின்ற மரத்திற்கே கல்லெறி விழும் என்று தெரிவித்த தலைவர் சுந்தரதாசன் தான் 10 ஆண்டுகளாக இப்பதவியில் இருப்பதாகவும் தன்னை விட்டுவிடச் சொன்னாலும் அவர்கள் தன்னையே தெரிவு செய்வதாகவும் கூறினார். தனக்கு இப்பதவிகளில் மோகம் இல்லை என்று தெரிவித்த அவர் தான் கூட்டத்திற்கு செல்லாமல் வீட்டில் இருந்தாலும் அவர்கள் தன்னையே தெரிவு செய்வதாகக் குறிப்பிட்டார்.

செப்ரம்பரில் வரவுள்ள பொதுக் கூட்டத்தில் நாங்கள் விலகிச் செல்கிறோம் இவர்கள் தங்களுக்கு விருப்பமான வகையில் நடத்தட்டும் என்று இருவரும் உதயனுக்குத் தெரிவித்தனர்.

அண்மையில் நடைபெற்ற கலைநிகழ்ச்சியில் 500 பேரை ஒன்றாகக் கண்டதும் இவர்களுக்கு பொறாமை வந்துவிட்டது அதனால் தான் இவர்கள் இப்படிக் குற்றம்சாட்டுகின்றனர் என தலைவரும் செயலாளரும் உதயனுக்குத் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில் எமது மக்களுக்கு எங்களால் ஆன உதவியை செய்கிறோம் அதற்கு இத்தனை குறைகள் வருவதாக அவர்கள் விசனம் தெரிவித்தனர்.

3ம் பக்கத் தொடர்ச்சி

## பேரக்குழந்தையுடன் தாத்தா பாட்டியின் இறுதி அஞ்சலி

திறந்த களைப்பில் சோர்வினால் கீழே தூங்கிக் கொண்டிருந்தார். அன்று வெப்பமும் அளவுக்கு அதிகமாகவே இருந்து. இரண்டாவது மாடியில் சிவஞானம் தம்பதிகள் இருந்தனர். அவர்களுடன் இருந்த குழந்தை அக்ஷனா அமைதியாகத் தூங்கிக் கொண்டிருந்தால். மகிழ்ச்சியான சிறிய அந்தக் கூட்டுக் குடும்பம் நடக்கப் போகும் அந்த விபரீதத்தை கனவிலும் நினைத்துப் பார்த்திருக்க மாட்டார்கள்.

வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த கௌரி ரவீந்திரன் கடையில் புகைவருவதைக் கண்டதும் உடனடியாக கணவரை எழுப்பினார். ரவீந்திரன் தீயணைப்பை எடுத்துக் கொண்டு தீயை கட்டுப்படுத்த முயன்றார். அருகில் இருந்த கடைக்காரரும் தனது தீயணைப்பை எடுத்து வந்து உதவினார். ஆனால் முயற்சி பலிக்கவில்லை. தீ அங்கிருந்த பத்திரிகைகள் சஞ்சிகைகளுக்குப் பரவியது. அதற்கிடையே கௌரி தீயணைப்பு படைக்கு அறிவித்த படியே முதலாவது மாடிக்குச் சென்று தாய் தந்தையை அழைக்கவும் கீழே என்ன புகையும் சத்தமும் என அவர்கள் இரண்டாவது மாடியில் இருந்து முதலாவது மாடிக்கு வரவும் சரியாக இருந்தது. அவர்களிடம் குழந்தையை காணாத கௌரி குழந்தையை தூக்கி வரும்படி கூறினார். குழந்தையை தூக்கிவரச் சென்றவர்கள் திரும்பி வர முடியாமல் புகை மூட்டம் எங்கும் பரவியது. கௌரியும் முதலாவது மாடியில் மாட்டிக் கொண்டார்.

அப்போது அங்கு வாகனத்தில் வந்த ஒருவர் சுத்தியலை எடுத்துக் கொண்டு ஏணியைவைத்து ஏறி முதலாவது மாடியில் இருந்த கௌரியைக் காப்பாற்றினார். அவர் குழுந்தையை காப்பாற்றும்படி கதறவே குழுந்தையை காப்பாற்ற எடுத்த முயற்சி தோல்வி அடைந்தது. காப்பாற்றப்பட்ட தாய் கௌரி வழங்கிய தகவலின் படி அவரது பெற்றோரின் சத்தம் கேட்டதாகவும் ஆனால் சிறிது நேரத்திலேயே அச்சத்தம் அடங்கி விட்டதாகவும் தெரிவித்தாக புதியவன் உதயனுக்குத் தெரிவித்தார்.

தீயணைக்கும் படையினர் சில நிமிடங்களிலேயே ஸ்தலத்திற்கு வந்தடைந்தனர். தீயணைப்பு படையினர் உடனடியாக பிளட்டை சோதனையிட்ட போது மூவரும் இறந்திருந்தது உறுதிப்படுத்தப்பட்டது. நீண்ட போராட்டத்தின் பின் தீயணைக்கப்பட்டு மூவரது உடலும் மாலையில் ஐந்து மணி நேரத்திற்குப் பின் மீட்கப்பட்டது. மூவரும் தீயினால் ஏற்பட்ட புகை மூட்டதித்திலேயே உயிரிழ்ந்திருக்கலாம் என அவர்களின் குடும்ப நண்பர் ஜூட் உதயனுக்குத் தெரிவித்தார்.

சில வினாடிகளில் பற்றிக் கொண்ட தீயின் புகைமூட்டம் விம்பிள்டன் ரெனிஸ் மைதானத்தில் இருந்தவர்களுக்கும் பார்க்கக் கூடியதாக இருந்துள்ளது.

தீயணைப்பு:

தீயணைப்புப் படையினர் வந்தடைந்த போது பெரும்பாலான கட்டிடத் தொகுதியில் தீ கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தது. 8 தீயணைப்பு வண்டிகளும் 40 தீயணைப்புப் படையினரும் தீயை கட்டுப்படுத்த போராடினர்.

இத்தீ மின்சார ஒழுக்கினால் ஏற்பட்டதாக இருக்கலாம் என கருதப்படுகிறது. இது தொடர்பான விசாரணைகளை பொலிசாரும் தீயணைப்புப் படையினரும் மேற்கொண்டுள்ளனர்.

லண்டனில் வீடுகளில் 6,355 . தீ விபத்துக்கள் 2005/06 காலப்பகுதியில் இடம்பெற்றுள்ளது. மேலும் இதே காலப்பகுதியில் 1,156 திட்டமிட்டு தீ வைப்புச் சம்பவங்கள் இடம்பெற்றள்ளது. 2000 முதல் 2004 வரையான காலப்பகுதியில் லண்டனில் ஆண்டுக்கு 53 பேர் வீடுகளில் ஏற்படும் தீயினால் மரணமடைகின்றனர். 2005/06 காலப்பகுதியில் இத்தொகை 50 ஆகக் குறைந்துள்ளது. தீ விபத்துக்களைத் தடுப்பதற்கான தகவல்களைப் பெற்றுக்கொள்ள இவ்விணையத் தளத்தைப் பார்வையிடவும். www.firekills.gov.uk/handbook/pdf/handbook-english.pdf

3ம் பக்கத் தொடர்ச்சி

## காரைவெல்பெயர் சொசைட்டியும் ...

உருவாகவோ கூடவில்லை என்றும் காரைநகர் சம்பந்தமான விடயங்களை சிறப்பாக செய்ய ஆலோசனைகளை பெறுவதற்காகவே இக்கூட்டம் என்றும் மிகத் தெளிவாகத் தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து அமரர் செல்வாவின் நினைவு அஞ்சலி இடம்பெற்றது.

அடுத்து காரை வெல்பெயர் சொசைட்டியின் உறுப்பினர் ரி சோதிலிங்கம் பேசுகையில் கடந்த 2 வருடங்களாக காரைநகர் மக்கள் பற்றியும் அவர்களது எதிர்பார்ப்புகள், அதிருப்திகள் பற்றியும் காரை வெல்பெயர் சொசைட்டியின் பற்றி மக்களின் நிலைப்பாடு பற்றியும் கூறினார். அத்தோடு இக்கூட்டம் ஒரு தனிமனிதனால் உருவாக்கப்படவில்லை என்றும் இதற்கு தலைவர் என்று யாரும் இல்லை என்றும் கூறினார்.

தொடர்ந்து பேசிய சோதிலிங்கம் "K.W.S புதிய தலைமுறையினரை உள்வாங்காது செயற்படுமானால் இன்னும் சில வருடங்களில் ஆளில்லாமல் போய் லண்டனில் காரைநகரின் அடையாளம் அழிந்துவிடும். ஆகவே இங்குள்ள எமது மக்களுடன் கலந்து பேசி இதற்கு ஒரு பொதுக்குழு ஒன்றை அமைத்து செயற்பட வேண்டும்" என்றார். இதை கூறியதும் செயற்குழு உறுப்பினர் வி நாகேந்திரம் எழுந்து "இவர்கள் தங்களுக்கு காசு சேர்க்க யோசிக்கிறார்கள்" என்றார். செயலாளர் கலாநிதி சபாரத்தினம் "இவர்கள் தாங்கள் பெயர் எடுக்கத்தான் இப்படி கதைக்கிறார்கள்" என்று கூச்சலிட்டார். K.W.S தலைவர் சுந்தரதாசன் "இது சரிப்பட்டு வராது இவர்களுடன் பேசி பிரயோசனமில்லை. எழும்புங்கோ எல்லோரும் போவோம்" என்றார். உடனே சாதாரண காரைநகர் வாசியான விக்கி நிலைமையை சுமூகமாக்க நினைத்து "இங்கே யாரும் சண்டை பிடிக்க வரவில்லை. எல்லோரும் அமைதியாக இருந்து கதைப்போம்" என்றார். அதற்கு ஆவேசப்பட்டு எழுந்த தலைவரின் தம்பி சிவில் இன்ஜினியரின் பட்டதாரியான சிவதாசன் எழுந்து "அடிபடுவது என்றால் வெளியே வாடா" என்று கத்தினார். கூட்டத்தில் இருந்த குழந்தைகள் திடுக்குற்றனர்.

தனது பேச்சைத் தொடர முடியாத சோதிலிங்கம் தனது "நீங்கள் இப்படித்தானா பொது அமைப்பை நடத்துகிறீர்கள்? இப்படித்தானா மற்றையவர்களின் கருத்தை உள்வாங்குகிறீர்கள்? நீங்கள் எப்ப மற்றவர்களுடன், மாற்றுக் கருத்துக் கொண்டவர்களுடன் அமைதியாக பேசிப் பழகப் போகிறீர்கள்?" என்று கேள்வி எழுப்பினார். அதற்கு K.W.S செயற்குழு உறுப்பினர்கள் "வாயை மூடடா நாயே?" என்று கூச்சலிட்டனர். அதற்குப் பதிலளித்த சோதிலிங்கம் "நீங்கள் படித்தவர்கள் பண்பானவர்கள் என்று நினைத்தது எங்கள் தவறு. இவ்வளவுதானா உங்கள் ஆளுமை" என்று சலித்துக் கொண்டார்.

சோதிலிங்கம் K.W.S செயற்குழு உறுப்பினர்களின் கூச்சலையும் குழப்பத்தையும் பொருட்படுத்தாமல் தான் சொல்லவந்ததை பேசி முடிப்பதென கங்கணம் கட்டி நின்றார். சபையிலும் சோதிலிங்கத்தின் பேச்சுக்கு ஆதரவாக கரகோஷங்கள் எழுந்தது. "நீங்கள் இப்படி கூச்சல் போடுவதால் யாரையும் மிரட்டிவிட முடியாது" என்று சோதிலிங்கம் கூச்சலிட்ட செயற்குழு உறுப்பினர்களை பார்த்துத் தெரிவித்தார். செயற்குழு உறுப்பினர்கள் விடுவதாக இல்லை. எழுந்து நின்று கூச்சலிட்டு கூட்டத்தை குழப்புவதில் வெற்றி பெற்றனர். சோதிலிங்கத்தினால் பேச வந்தவற்றை பேச முடியவில்லை. இதனிடையே செயலாளர் சபாரத்தினம் எழுந்து, "தன்னால் காரை வெல்பெயர் சொசைட்டியை கலைத்துவிட முடியும்" என்றார்.

இவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் சிலர் தமது கருத்துக்களை முன்வைக்கத் தவறவில்லை. சோமா சொலிசிற்ரேர்ஸ் சட்டத்தரணி சோமசுந்தரம், காரை வெல்பெயர் சொசைட்டியின் மீது வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளில் உண்மையுள்ளது என்று தெரிவித்தார். தான் அண்மையில் காரைநகர் சென்றிருந்த போது யாழ்ட்டன் அதிபர் இது பற்றி நிறையவெ தன்னிடம் குறிப்பிட்டதாக சட்டத்தரணி சோமசுந்தரம் தெரிவித்தார். கடந்த காலங்களில் காலம் சென்ற எம் பி தியாகராஜா பல தடைக் கற்களைப் போட்டு யாழ்ட்டன் கல்லூரியின் வளர்ச்சியை தடுத்தது போல காரை வெல்பெயர் சொசைட்டியும் பாரபட்சமாய் நடப்பதாக சோமசுந்தரம் குற்றம்சாட்டினார். அவர் தொடர்ந்து பேசுகையில் இக்கூட்டத்தை ஏற்பாடு செய்த குமாரை பாராட்டியதுடன் இது நல்ல முன்னெடுப்பு என்றும் பலரும் தமது அபிப்பிராயங்களை உள்ளே வைத்திருக்காமல் பேசுவதன் மூலமே முன்னேற்றகரமான விடயங்களை யோசிக்க முடியும் என்று தெரிவித்தார்.

தான் காரை வெல்பெயர் சொசைட்டியின் உறுப்பினர் அல்ல என்று தன் கருத்தை முன் வைக்க எழுந்த பரன் என்ற இளைஞரை கே ராசரத்தினம், ஆர் சுந்தரதாசன், ஆர் சிவதாசன் ஆகியோர் கைதட்டி நையாண்டி செய்து அவர் கருத்தை வெளியிட முடியாது தடுத்தனர்.

இதன் பிறகு அதுவரை குழப்பம் விளைவித்துக் கொண்டிருந்த காரை வெல்பெயர் சொசைட்டியின் தலைவர் சுந்தரதாசன் தான் 10 வருடமாகத் தலைவராக இருப்பதாகவும் இதனால் தனக்கும் மனைவிக்கும் தொடர்ந்தும் சண்டை என்றும் தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் பேசுகையில் "காரைநகர், காரைநகர் என்று உருகுகிறியளே உந்த காரைநகர் உங்களுக்கு என்ன செய்தது?" என்று தனது மனைவி தன்னைக் கேட்பதாகக் கூறிய அவர் தான் இப்பவே பதவியை ராஜிநாமச் செய்யப் போவதாகவும் சொன்னார். தங்கள் எல்லோரையும் மாற்றி புதியவர்களைப் போடுங்கோ என்று குறிப்பிட்ட அவர் நிதிப் பொறுப்பாளர் (பொருளாளர்) கணனாநந்தனையும் செயலாளர் சபாரத்தினத்தையும் எப்பவும் இந்த காரை சொசைட்டிக்குள் வைத்திருக்க வேண்டும், கட்டாயம் வைத்திருக்க வேண்டும் என்று மிகவும் அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்தார்.

இக்கூட்டத்தை ஏற்பாடு செய்த இளைஞர்கள் திட்டமிட்ட படி கலந்துரையாடப்பட வேண்டிய விடயங்கள் எதையும் கலந்துரையாட முடியவில்லை. இக்கூட்டத்தில் சத்தம் போட்டவர்கள் அனைவரும் K.W.S இன் செயற்குழு உறுப்பினர்களே என்பது குறிப்பிடத்தக்கது. இதில் குடும்பமாகவும் சிலர் கலந்து கொண்டனர். அப்படிக் கலந்து கொண்ட சிறுவர் ஒருவரிடம் அவரின் அனுபவத்தை உதயன் சார்பாகக் கேட்டு போது (தமிழாக்கம்) "அம்மா சொன்னா meetingக்கு காரைநகர் people எல்லாம் வருவினம். அவையல் கனபேர் எங்களுக்குச் relative என்று. ஆனா meetingக்கு வந்த ஆக்கள் கொஞ்சப்பேர் angryயா fight பண்ணீனம். நாங்கள் schoolல்ல hundreds of yearsக்கு முதல் people இப்படித்தான் talk பண்ணுறவை என்டுதான் படிச்ச நாங்கள். ஆனா modern societyல fight பண்ணாம softஆக கதைக்க வேணும். one by oneஆ கதைக்க வேணும்" என்று கூறினார்.

வரும் பொதுக்கூட்டத்தில் தங்கள் கருத்துக்கள் உள்வாங்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் அல்லது புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட வேண்டும். இவற்றில் ஒன்று இடம்பெறாத பட்சத்தில் புதிய அமைப்பு ஒன்றை ஆரம்பித்து செயற்பட உள்ளதாக கூட்ட ஏற்பாட்டாளர்களில் ஒருவான பேபி உதயனுக்குத் தெரிவித்தார்.


Best Prayers
&
Best Answers

Ladies contacting the special prayers and havans and poojas in Edgware Temple first time in London. Without poojaries.

Reported by Jeyabalan

# 'சமத்துவத்திற்கு மேலாக எதையும் வழங்கமுடியாது' லண்டனில் ஜேவிபி தலைவர் சோமவன்ச

ஐரோப்பிய விஜயத்தை மேற்கொண்டு லண்டன் வந்த ஜேவிபி தலைவர் சோமவன்ச அமரசிங்க "நாங்கள் சமத்துவத்திற்காக போராடுகிறோம். இதன் மூலமே எதிர்காலத்தில் பிரச்சினைகள் எழுவதை தடுக்க முடியும். சமத்துவத்திற்கு மேலாக எதையும் வழங்க முடியாது." என்று உதயனுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார். சிங்களவர்களோ, தமிழர்களோ, முஸ்லீம்களோ இலங்கை இலங்கையர்களுக்கே உரியது என்று குறிப்பிட்ட சோமவன்ச, "இலங்கை அதன் மக்கள் தொகைக்கு ஏற்ப சரிசமமாக பங்கிடப்பட வேண்டும். வடக்கு கிழக்கில் மூன்று சமூகத்தையும் சேர்ந்த 12 வீதமான மக்கள் வாழ்கிறார்கள். அவர்கள் 33 வீதமான நிலத்தைக் கேட்கிறார்கள். இது எப்படி நியாயமாக முடியும்?" என்றும் கேள்வி எழுப்பினார்.



ஜேவிபி யின் கூட்டம் யூன் 25ல் அக்ரன் ரவுன்ஹொலில் இடம்பெற்றது. நூற்றுக்கும் மேற்பட்ட சிங்கள மக்கள் இதில் கலந்துகொண்டிருந்தனர். அன்று கூட்டம் இடம்பெற்ற அதே நேரத்தில் இங்கிலாந்து உதைபந்தாட்ட அணி உலக கோப்பை போட்டியில் பங்குபற்றி இருந்ததால் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களின் வரவு குறைவாகவே இருந்தது. மேலும் படுகொலை செய்யப்பட்ட ஈபிஆர்எல்ப் தலைவர் பத்மநாபாவின் நினைவஞ்சலியும் அதே நேரம் இடம்பெற்றதால் தமிழ் மக்கள் தரப்பில் இருந்தும் பெரும்பாலும் யாரும் கலந்துகொள்ளவில்லை.

ஜேவிபி ஒரு இனவாத அமைப்பா? என்ற உதயன் நிருபரின் கேள்விக்குப் பதிலளித்த சோமவன்ச "நாங்கள் ஒன்றல்ல இருதரம் ஆயுதம் தூக்கி இருந்தோம். ஆனால் எந்த ஒரு தமிழரோ வேறு இனத்தவரோ எங்களால் துன்புறுத்தப்படவில்லை. நாங்கள் எப்போதும் இனவாதத்தை ஏற்றுக் கொள்ளவில்லை, வளர்க்கவில்லை, ஊக்குவிக்கவில்லை. 1983ல் யுஎன்பி காடையர்களால் தமிழர்கள் தாக்கப்பட்ட போது நாங்கள் அவர்களை காப்பாற்றினோம்." எனத் தெரிவித்தார்.

லண்டனில் கூட்ட ஒழுங்கை மேற்கொண்டிருந்த ஜேவிபி ஆதரவாளர்களை வி.புலிகள் மிரட்டியதாகக் கூறிய சோமவன்ச நாங்களும் தாய் நாட்டுக்காக இரு தடவை ஆயுதம் தூக்கியவர்கள் என்றும் உயிருக்குப் பயந்தவர்கள் இல்லை என்றும் தமிழ் மக்கள் தங்களை புரிந்துகொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

# கறுப்பு யூலை

1983ல் இடம்பெற்ற இனப் படுகொலையை நினைவு கூரும் நிகழ்வு 8 ஆண்டகளுக்குப் பின் மீண்டும் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. அண்மைக்காலமாக திடிர் திடிரென முளைக்கும் அமைப்புகளால் ஏற்பாடு செய்யப்படும் சில நிகழ்வுகள் குழப்பத்தையும் ஏற்படுத்தி வருகிறது.

தயா இடைக்காடரின் உண்ணாவிரதத்தை ஏற்பாடு செய்த தமிழ் தேசியப் பற்றாளர்கள் என்ற அமைப்பு யூலை 30ல் கறுப்பு யூலை தினத்திற்கு அழைப்பு விடுத்திருந்து. ஆனால் இந்த ஏற்பாடு தமக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தலின் படி கைவிடப்பட்டதாக அக்குழுவினர் உதயனுக்குத் தெரிவிக்கின்றனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில் தற்போது தமிழ் இளைஞர் அமைப்பு (யு.கெ) என்ற அமைப்பே யூலை 25ல் ஹைப்பாக்கில் பேரணி ஒன்றை ஒழுங்கு செய்துள்ளனர் என்று தெரிவித்தனர்.

# பொலிவூட் - ஹாலிவூட் படங்களுக்கு இலங்கையில் கூடுதல் வரி

இலங்கை அரசு உள்ளூர் சினிமா மற்றும் திரைப்படத் துறையினை ஊக்குவிக்கும் நோக்குடன் பொலிவூட் ஹொலிவூட் திரைப்படங்களுக்கு பொழுது போக்கு வலியை அதிகரித்துள்ளது. இந்திய மற்றும் ஹொலிவூட் தயாரிப்புக்கள் உள்ளூர் தொலைக்காட்சி அலைவரிசைகளில் காண்பிக்க அதிக பட்ச வரிவிதிப்பு முறை யூலை 1ல் இருந்து அறிமுகப்படுத்தி இருக்கின்றது.

இந்த புதிய வரிவிதிப்பின் படி உள்ளூர் தொலைக்காட்சி அலைவரிசைகளில் காண்பிக்கப்படும் பொலிவூட் மற்றும் ஹொலிவூட் தயாரிப்பு படங்களுக்கு வருடாந்த இறக்குமதி வரியாக சுமார் 10 லட்சம் ரூபாய்கள் விதிக்கப்படும் என்றும் சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் டப்பிங் செய்யப்பட்டு அல்லது உப தலைப்புகளுடன் காண்பிக்கப்படும் திரைப்படங்கள் அல்லது நாடகங்களுக்கு ஒவ்வொரு அரைமணி நேரத்திற்கும் 90,000 ரூபாய்கள் விதிக்கப்படும் என்று நிதியமைச்சின் செயலாளர் ஜெயசுந்தர தெரிவித்துள்ளார்.

இதனால் வசூலிக்கப்படும் வருமானமானது உள்ளூர் சினிமா மற்றும் திரைப்படக் கலையினை ஊக்குவிக்கும் நோக்கத்திற்காக பயன்படுத்தப்படும் என்று ஜெயசுந்தர தெரிவித்தார். இது ஒரு வருமானமீட்டும் முறையாக அறிமுகப்படுத்தப்படவில்லை என்று தெரிவித்த ஜெயசுந்தர உள்ளூர் கலைத்துறையினை ஊக்குவிக்கும் கொள்கையாகவே இவ்வரி விதிப்பு முறை அமுலுக்கு வந்திருக்கிறது என்று பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

ஜெயசுந்தர அங்கு மேலும் தெரிவிக்கையில் இறக்குமதி செய்யப்படும் தமிழ் படங்களுக்கு வரிகள் ஏதும் விதிக்கப்பட மாட்டாது என்றும் உள்ளூரில் தமிழ் திரைப்பட உற்பத்தியும் கலைஞர்கள் மிகவும் பற்றாக்குறையாக இருப்பதுமே இதற்கான காரணம் என்றும் தெளிவுபடுத்தினார்.

# படங்களில் தற்கொலைக் காட்சிகள் தணிக்கை செய்யப்பட வேண்டும் - மலேசிய அமைச்சர்

மலேசியாவில் சிறுபான்மையாக வாழ்ந்து வரும் தமிழர்கள் திரைப்படங்களைப் பின்பற்றி தற்கொலை செய்வது சமீபகாலமாக மலேசியாவில் அதிகரித்து வருகிறது. அதனால் தற்கொலைக் காட்சிகளை காண்பிக்கும் இறக்குமதி செய்யப்பட்ட இந்தியத் திரைப்படங்கள் தணிக்கை செய்யப்பட வேண்டும் என மலேசிய நாட்டினை சேர்ந்த அமைச்சர் ஜி பழனிவேல் கூறியுள்ளார். இவர் தமிழர்களின் ஆதிக்கம் நிறைந்த மலேசிய இந்திய காங்கிரஸ் கட்சியின் துணைத்தலைவராவார்.

அண்மையில் வேகமாகச் சென்று கொண்டிருந்த ரயில் முன்பாக தாய் ஒருவர் தனது நான்கு குழந்தைகளுடன் பாய்ந்த தற்கொலை நிகழ்வை அடுத்தே அமைச்சர் இவ்வேண்டுகோளை விடுத்துள்ளார். இந்த சம்பவத்தில் இருவர் உயிர் தப்பிவிட்டனர்.

இந்திய திரைப்பட இயக்குநர்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

KENTON PARK SERVICE STATION
MR YOGESH JHALA
M.O.T & Service
- MOT While-U-Wait
- MOT Failures prepared for Re-test
- All types of Mechanical Work carried out
384 Kenton Rd, Harrow, HA3 9DP
Tel 020 8907 3111, 020 8907 1091

George Fraser - Dedicated to Quality Car Care Service
Specialists in Mercedes-Benz Service, Repairs, Bodywork and Electrics
Repair and exchange of automatic gearboxes
- 24 years experience
- Mercedes-Benz trained technicians
- Free delivery & collection
- Free MoT on major Services
- Official Mercedes-Benz Diagnostic on site
Call us now on
020 8795 1055
Wembley, Middlesex
MERCEDES-BENZ ENGINEERS

TYRE CHECK & AUTO SPARES - ACCESSORIES
(BRITISH & FOREIGN CARS)
NEW & PART WORN TYRES BATTERIES
WHEEL BALANCING EXHAUST
WHEEL ALIGNMENT BRAKES
NEW & SECOND HAND RIMS SERVICE
SHOCK ABSORBERS MOT WORK
OPEN SEVEN DAYS A WEEK
MON-SAT 8.30AM TO 7PM - SUN 9.00AM TO 6.00PM
368, HIGH ST NORTH, EASTHAM, LONDON, E12 6PH
TEL : 020 8586 0886
FAX : 020 8470 4745
MOBILE : 07956353774

To Advertise 020 8952 5677

Motor Masters
Top Quality Servicing & Repair on all Makes of Vehicles
M.O.T While You Wait
Unit 7 The Squirrel Trading Estate, Viveash Close, Nestles Ave, Hayes, Middlesex UB3 4RZ
Tel: 020 8561 9100
Fax: 020 8573 8641

MANGALA MOTORS
High Quality at Sensible Prices
- Car/Van Sales
- Full and Iterim service
- MOT & Mechanical Repairs
- Professional Technician
- Fully Guranteed Job
Call On
020 8203 6655
Unit 1, 3 & 4, The Bridges
Aerodrome Road, London NW4 4SS

ALFARAMA
DEDICATED TO ALFA ROMEO SINCE 1971
Alfa Romeo SERVICE CENTRE
SALES • SERVICE • PARTS • BODYSHOP
LOAN CARS • COLLECTION & DELIVERY
020 - 8951 4100
UNIT 5 • PARR ROAD • STANMORE • MIDDX. HA7 1NL

# வைக்கோவும் அவரது சந்தர்ப்பவாத அரசியலும்



கடந்தமுறை நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் தி.மு.க தலைமையிலான கூட்டணி 39 இடங்களையும் பெற்று வலுவான நிலையில் இருந்தது. இதே கூட்டணி சட்டமன்றத்துக்கும் நீடிக்கும் என தி.மு.கவுடன் கூட்டணி வைத்துக்கொண்ட பா.ம.க, காங்கிரஸ், கம்யூனிஸ்ட், ம.தி.மு.க தலைமைகள் அறிக்கை விடுத்தவண்ணம் இருந்தன. இச்சூழலில் பொடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட வைகோ சிறைமீண்டு பிணையில் வந்த போது ஜெயலலிதா ஆட்சியை தமிழகத்தில் இருந்து விரட்டப்போவதாக அறிக்கை விட்டதுடன் தமிழகம் முழுவதும் நடைபயணத்தை மேற்கொண்டு ஜெயலலிதாவின் கொடுங்கோள் ஆட்சியை விமர்சித்து வந்தார். தேர்தல் நெருங்கிவரும் வேளையில் தி.மு.க தனக்கு ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு போதாது என்ற காரணத்தை காட்டி ஜெயலலிதாவுடன் ரகசிய கூட்டு வைத்து நடத்தப்பட்ட பேரம் அம்பலப்பட்டுப் போனது.

மீண்டும் வழக்கம் போல தனது சந்தர்ப்பவாத கூட்டணியை நியாயப்படுத்தும் விதத்தில் பா.ஜ.க ஆட்சியில் பங்கெடுத்த தி.மு.க எப்படி காங்கிரசுடன் ரகசிய உறவு மேற்கொண்டதோ அதே போல தானும் தி.மு.க கூட்டணியில் இருந்து கொண்டே ஜெயலலிதாவுடன் ரகசிய பேரத்தில் ஈடுபட்டு வந்ததாக கூறியுள்ளார். வைகோவின் இந்த சந்தர்ப்பவாதம் என்பது புதியது அல்ல. தி.மு.க வுடனான முரண்பாடு வந்தவுடன் குடும்ப ஆதிக்கத்தை வெளிக்காட்டி வெளிவந்த வைகோவிற்கு அப்போதே ஜெயலலிதா உதவினார் என்பது தி.மு.க தலைவர்களின் குற்றச்சாட்டு. பின்பு இது ஒப்புக்கொள்ளப்பட்டது. பெரிய கட்சியில் இருந்து பிரிந்துவரும் கட்சிகளுக்கு மாற்று பெரிய கட்சிகள் பொருளாதார உதவிகள் மேற்கொள்வதாக கூறப்பட்டு வந்தது.

முன்பு தனித்து போட்டியிட்டு படுதோல்வி அடைந்த வைகோ பின்பு மீண்டும் தி.மு.க கூட்டணியில் இடம்பெற்றதுடன் தன்னை பெரியாரின் வாரிசாக காட்டிக்கொண்டு மத்திய பா.ஜ கட்சிக்கு ஆதரவு அளித்து வந்ததுடன் பொடா போன்ற பயங்கரவாத சட்டத்தை ஆதரித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் புலிகள் இயக்கம் இந்தியாவில் தடைசெய்யப்பட்டு இருந்ததும் பொடாவின் கீழ் மீண்டும் தடைசெய்யப்பட்டதுடன் இத்துடன் பல்வேறு தேசிய அளவிலான போராட்ட அமைப்புகளும் தடைசெய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

பின்பு காங்கிரஸ் அரசுடன் கூட்டணி சேர்ந்து மத்திய அரசில் இடம்பிடித்தது என்றும் சந்தர்ப்பவாத அரசியலில் தனது குரு கருணாநிதியை மிஞ்சியவராக வைகோ இருந்தார் என்பதே நிருபனம். மேலும் மத்தியில் ஆளும் எந்த அரசாக இருந்தாலும் சரி வளைந்து கொடுக்கக்கூடிய தலைவராக தமிழகத்தில் வைகோ இருப்பது தேசிய தலைவர்களுக்கு வசதியாகவும் தி.மு.கவுக்கு மாற்றாக பிற்காலத்தில் வளர்ந்தால் உதவக்கூடியவராகவும் இருப்பார் என்பதை வாஜ்பாய் அரசியலில் நெருங்கிய உறவும் பின்பு மன்மோகன்சிங் அரசுடனான நெருங்கிய உறவின் மூலம் தன்னை வெளிக்காட்டிக் கொண்டதன் மூலம் தன்னுடைய இருப்பிடத்தை வெளிக்காட்டியுள்ளார்.

தன்னை ஈழவிடுதலை உணர்வாளராக காட்டிக் கொண்டாலும் உண்மையில் போராடும் மக்களை காட்டிக் கொடுக்கவும் அடக்குமுறை ஏவிவிடும் அரசுகளுடன் குலாவுவதன் மூலமும் தானும் மாற்று அரசியல்வாதிகளுக்கு சளைத்தவர் அல்ல என்பதை நிரூபித்துள்ளார்.

13 ஆண்டுகளுக்கு பிறகு தனது கட்சி 6 எம்.எல்.ஏக்களை முதன்முதலில் சட்டமன்றத்துக்கு அனுப்பும் சூழலில் மக்களின் தீர்ப்பை மதிக்காமல் போலியான தேர்தல் வாக்குறுதி மூலம் கருணாநிதி மக்களை ஏமாற்றி வெற்றிபெற்றார் என்று அறிக்கை விடுத்துள்ளார். ஜெயலலிதா கூட மக்களின் தீர்ப்பை ஏற்றுக்கொள்வதாக கூறியுள்ள நிலையில் தனது சந்தர்ப்பவாதத்திற்கு கிடைத்த மிகப்பெரும் அடி என்பதை இன்னும் உணராத நிலையில் வைகோ இருக்கிறார் என்பதும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரானவர் வைகோ என்பதை கருணாநிதி அம்பலப்படுத்திய போது எதற்கெல்லாமோ வழக்கு தொடுப்பேன் என அறிக்கை விட்ட வைகோ கருணாநிதியின் குற்றச்சாட்டுக்கு சகட்டுமேனிக்கு திட்டித்தீர்த்தாரே ஒழிய வழக்கு தொடுக்க போவதாக எந்தவித அறிவிப்பையும் காணவில்லை. இப்படி தொடரும் சந்தர்ப்பவாத அரசியலில் முகம் கிழிந்த நிலையில் படுதோல்வி கண்டு வைகோ இருக்கிறார்.

தலித் மக்களின் தலைவன் தான் ஒருவனே என்று கூறிக்கொள்ளும் திருமாவளவனோ தேர்தல் பாதையில் அடியெடுத்து வைத்த உடனே அதற்கே உண்டான அரசியலில் அனைவரையும் மிஞ்சிவிட்டார். கொடியன்குளத்தில் நடைபெற்ற தாழ்த்தப்பட்ட மக்கள் மீதான தாக்குதலை கண்டித்து துடித்துப் போன திருமாவளவன் முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் மூலம் அ.தி.மு.கவில் இருந்து தூது வந்தவுடன் ஜெயலலிதாவை சந்தித்த போது(பழைய கதை) வெளியில் விட்ட அறிக்கை ஜெயலலிதா மீது தவறு இல்லை, அதிகாரிகள் தான் தவறு செய்தார்கள் என்று ஜெயலலிதாவின் spokesman ஆக செயல்பட்டு ஜெயலலிதாவின் கட்டளைப்படி அந்த தேர்தலில் தனித்து போட்டியிட்டார். அதற்கான செலவுகளை(12 கோடி) கணிசமாக அ.தி.மு.க வால் ஈடுசெய்யப்பட்டதை விடுதலைச் சிறுத்தையின் முன்னாள் பொதுச்செயலாளர் பெரியசாமி வெளிப்படுத்தியிருந்தார். (தொடர்ச்சி 11ம் பக்கம்)




Jayesh Flowerist
Flowers for all Occasions..
Local - National - Worldwide
Delivery Service Avalable
Specialist in Wedding
& Funeral Flowers
FREE PHONE 0800 092 22 33
Open 7 Days
020 8459 2828
366 High Rd, Willesden,
NW10 2EA, London
Bye Online ....
www.jeyeshflowrist.com



Asian
Funeral
Care Ltd

*A personal tailored service to meet every induvidual religious cultural need at reasonable rates
*Private viewing and Service Hall
Tel :0208 909 3030
Mob:07970 934623

# இதயங்கள் துடிக்கட்டும் - நோயற்ற வாழ்வு

**Dr சிவக்குமார்**

Heart failure - இதய செயற்பாடு அற்றுப் போதலால் அதிகமாக முதியோர் இறக்கிறார்கள். UKயில் இதுவே மிக முக்கியமான இறப்புக்காரணியாகும். ஏறத்தாள UKயில் 900,000 பேர் இதனால் பாதிக்கப்பட்டு உள்ளார்கள். இதில் 1,000 பேரை எடுத்தால்
0.2% இற்கும் குறைவானவர்கள் 55 வயதிற்கு உட்பட்டவர்கள்.
3.0% ஆனோர் 65 - 74 வயதுடையவர்கள்.
7.4% ஆனோர் 75 - 84 வயதுடையவர்கள்.
11.6% ஆனோர் 85 வயதைத் தாண்டியவர்கள்
என கணிப்பிட்டுள்ளார்கள். heart failure பல காரணிகளால் ஏற்படலாம். இதில் மாரடைப்பு முக்கியமான ஒன்றாகும். NHS 716 மில்லியன் பவுணை இதற்காக ஒதுக்கியுள்ளது. இது அதன் பட்ஜெட்டில் 1.8% ஆகும்.

## மாரடைப்பு என்றால் என்ன?

இதயத்தில் உள்ள இரத்த குழாய்கள் திடீர் என அடைபடுவதால் இதயம் தனது செயலை இழந்து இரத்த ஓட்டம் தடைப்பட்டு ஆபத்தை ஏற்படுத்துகிறது. சாதாரணமாக 80 வயதுக்கு முன் வருவது பொதுவாக தடுக்கப்பட வேண்டியது. இது பொதுவாக 40 - 65 வயதுடையவர்களுக்கு ஏற்படும் வாய்ப்பு உள்ளது. அசாதாரணமாக 20 - 25 வயதிலும் ஏற்படுவதுண்டு.

## இது எப்படி உண்டாகிறது?

இதயத்தசை நார்களுக்கு தேவையான இரத்தத்தை எடுத்துச் செல்லும் இரத்த குழாய்கள் இரண்டு உண்டு. இடது புறத்தில் உள்ளது இரண்டாக பிரிந்து செல்கிறது. வலது பக்கம் மூன்று பெரும் குழாய்களாக பிரிகின்றது. இவ்விரத்த குழாய்களை முடியுரு நாடிகள் என அழைப்பர். இதில் அத்திரோல் கொலஸ்திரோல் என்ற கொழுப்பு படிவதால் இரத்த ஓட்டம் தாமதப்படுத்தப்பட்டு அல்லது தடைப்பட்டு இரத்த பைபிரின் உடன் சேர்ந்து இரத்த அடைப்பினை ஏற்படுத்துகின்றது. இந்த அடைப்பு 75% இற்கு கூடியவுடன் மாரடைப்பு அல்லது நெஞ்சுவலி ஏற்படுகின்றது.

## மாரடைப்பிற்கான காரணங்கள் என்ன?

இரத்தத்தில் உள்ள கொழுப்பு, உடல் பருமன் அதிகரிப்பு, இரத்த கொதிப்பு, சர்க்கரை வியாதி, குடும்பத்தில் உள்ளவர்களுக்கு வந்தால், ஆண் பரம்பரை, கோபம், மனச்சுமை, உணர்ச்சிப் போராட்டம், ரென்ஷன் போன்றன.

## மாரடைப்பை எவ்வாறு கட்டுப்படுத்தலாம்?

புகைத்தலை தடைசெய்தல், கொலஸ்திரோல் அளவை குறைத்தல், இரத்த கொதிப்பை சரியான அளவில் பேணுதல், சலரோகம் வராமல் தடுத்தல், உடல் எடையை பேணுதல், சுறுசுறுப்பாக இருத்தல், மனஅழுத்தத்தை குறைத்தல், stress ஐ குறைத்தல், கருத்தடை மாத்திரை பாவித்தலை குறைத்தல் அல்லது தடுத்தல் போன்றன.

## அறிகுறிகள் எவை?

மார்பு வலி, இது நெஞ்சின் நடுப்பகுதியில் தொடங்கி இடது தோள், இடது கை, கழுத்து பகுதிகளில் முடியும். சில சந்தர்ப்பங்களில் கீழ்ப்புற நெஞ்சில் இருந்து மேல்ப்புற வயிறு வரை வலி வரலாம். இதை வயிற்று நோ என கருதி அசட்டையாக இருக்கக்கூடாது.

வியர்த்தல், வாந்தி, வயிற்று குமட்டல், நடந்தால் படி ஏறினால் வலி அதிகமாக இருக்கும், ஓய்வு எடுத்தால் கொஞ்சம் ஆறுதலாக இருக்கும்.

## மாரடைப்பினை எவ்வாறு கண்டுபிடிக்கலாம்?

ECG மூலம், Echo cardio graphy மூலம், GTN என்ற மருந்து மூலம், bio chemical test மூலம் அறியலாம். இதை விட நோயாளிக்கு மூச்சுவிட கடினமாக இருக்கும், கிறுதியாக இருக்கும், தலிவலி இருக்கும், ஒழுங்கற்ற வேகமான நாடித்துடிப்பு, நினைவாற்றலை இழக்கும் தன்மை போன்றவற்றை வைத்தும் அறியலாம். மேலும் மாரடைப்பு சந்தர்ப்பத்தில் சில நொதியங்கள், சில இரசாயன பதார்த்தங்கள் வெளிவரும். இவற்றை ஆராய்வதன் மூலமும் உறுதிப்படுத்தலாம்.

எனவே நெஞ்சுவலி அல்லது மேலே கூறிய அறிகுறிகள் ஏதாவது தெரிந்தால் உடனே அம்புலன்ஸ் ஐ அழைத்து நேரே வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல வேண்டும். எவ்வளவு விரைவில் செல்கிறீர்களோ அவ்வளவுக்கு நல்லது.

செய்தித்தொகுப்பு
ரி கொன்ரன்ரைன்

# அமெரிக்காவினுள் நுழைய புலம்பெயர்ந்த தமிழ் பாடகிக்குத் தடை

மேற்கத்தைய ஹிப் ஹொப் பாடகி மாயா அருள்பிரகாசம் (மாயா / மியா) (28) வுக்கு மே பிற்பகுதியில் அமெரிக்காவினுள் நுழைய அனுமதி மறுக்கப்பட்டு உள்ளது. அமெரிக்காவில் உள்ள ஹிப் ஹொப் தயாரிப்பாளர்களுடன் இணைந்து பணியாற்ற இருந்த திட்டத்தை அமெரிக்க அதிகாரிகள் தடை செய்துள்ளனர். இது பற்றி தனது இணையத் தளத்தில் கருத்து வெளியிட்டுள்ள மாயா தனது அரசியல்செய்தியே அமெரிக்க அதிகாரிகளின் தடைக்கு காரணம் என்று தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைக்கு போராடிய அமைப்புகளில் ஒன்றான ஈரோஸ் அமைப்பின் சிரேஸ்ட உறுப்பினர் அருளர் என்றறியப்பட்ட அருள்பிரகாசத்தின் மகளே மாயா என்பது குறிப்பிடத்தக்கது. மகள் மாயா தனது தந்தையின் பெயரில் அருளர் என்ற அல்பத்தை வெளியிட்டார். இது கடந்த ஆண்டு Mercury Music Prizeக்கு சிபார்சு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. மாயாவின் இரண்டாவது தனி அல்பமான Sun Showerல் தற்கொலைப் போராளியின் கதையைக் கூறுகிறார். இதற்காக இவரது MTV ஒளிநாடா அமெரிக்காவில் தடை செய்யப்பட்டது.

பேர்மொன்சேயில் பிறந்த மாயா சிறு வயதிலேயே இலங்கைக்கு குடும்பத்துடன் சென்று வாழ்ந்தார். அவருக்கு 11 வயதிருக்கும் போது அவரது குடும்பத்தினர் அரசியல் தஞ்சம் கோரி புலம்பெயர்ந்தனர். எப்போதும் தயக்கமின்றி வெளிப்படையாக தனது கருத்தை தெரிவிக்கும் மாயா இவ்வாறான சிக்கலில் மாட்டிக் கொள்வது இது முதற்தடவையல்ல.

அமெரிக்காவில் மிகவும் பிரபல்யமான ஹிப் ஹொப் இசை பெரும்பாலும் குற்றங்களையும் ஆடம்பரமான வாழ்க்கையையுமே மிளரச் செய்வதாக உள்ளது. மாறாக மாயா இலங்கை அரசிற்கு எதிரான தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நியாயப்படுத்தும் வகையில் தனது பாடல் வரிகளை அமைத்துக் கொண்டார். ஆனால் தற்கொலையாளி போன்ற விடயங்களை பயங்கரவாதத்துடன் தொடர்புபடுத்தி அவருக்கு அமெரிக்கா தடை விதித்துள்ளது.

ஹிப் ஹொப் இசை அமெரிக்காவிலேயே பெருமளவு பிரபல்யம் பெற்றுள்ளது. அவருக்கு அமெரிக்கா விதித்துள்ள தடை அவரது முன்னேற்றத்திற்கு முட்டுக் கட்டையாகவெ அமைந்துள்ளது. ஆயினும் இவரை மீண்டும் அமெரிக்காவிற்கு வரவழைக்கும் முயற்சிகளில் ஹிப் ஹொப் இசைத் தயாரிப்பு நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன. சர்வதேச தரம் மிக்க மாயாவின் ஹிப் ஹொப் இசை பெருமளவில் வரவேற்கப்படும் என்றும் அது விற்பனையில் சாதனையை நிகழ்த்தும் என்றும் ஹிப் ஹொப் தயாரிப்பாளர்கள் நம்புகின்றனர்.



மேற்கத்தைய இளவல்களை கலக்கும் மாயா அருள்பிரகாசம்

## மாயாவின் பாடல் வரிகள்

### Sunshhowers

He's made it to the Newsweek
Sweetheart seen it
He's doing it for the peeps.
peace.

### Fire Fire

Growin' up, brewin' up
Guerrilla getting trained up
Look out, Look out
From over the rooftop
Competition coming up now
Load up, aim,
Fire, fire,
pop

### Pull Up The People

You no like the people
They no like you
Then they go set it off with a big boom

Every gun in a battle is a son and daughter too
Why you wanna talk about who done who?
What you wanna talk about?
Slang tang
That's the M.I.A thang
I got the bombs to make you blow
I got the beats to make you bang bang bang
Pull up the people, pull up the poor
I'm a fighter, fighter god
I'm a soldier on that road
I'm a fighter, a nice, nice fighter
I'm a soldier on that road

(From Arular - XL Recordings)


A&G WINDOWS LTD
Manufacturers & Installers of Quality Double Glazing in U.P.V.C. Windows, Doors, Patio Doors, Porches, Conservatories
FREE ESTIMATE
Unit6, Derby Road, Hounslow Middx TW3 3UH
Tel: 020 8572 5567

லண்டன் தமிழர்களின் தரம் மிக்க பத்திரிகை உதயன்

PAMIR CARPETS & FURNITURES
SPECIAL OFFER
Laminate flooring from £6,99 per sqm
3 Bed Full House Carpet, Underlay & fitting £499 only
Free Estimating Delivery Fitting Underlay
020 8578 5080
405-407 Greenford Road Greenford

New Century Glazing Ltd.
...the ULTIMATE NEWBUILD or Complete refurbishment -
Eurocell's maintainence free PVCu WINDOWS and DOORS. FULLY WELDED and INTERNALLY BEADED...
Member of FENSA
Free Estimates
Tel: 020 8848 0189
Unit 5, Halls Business Centre, Pump Lane, Hayes, Middx.

SAFEWAY SHOPFITTERS
Shop Front - Roller Shutter - Glass - Signs
• Shop Shutters • Remote Control Garage shutters
• Van Shutters • Door Closers • Industrial Shutters
• Door/Shutters Locks • Shutter Altrations
CHOICE OF ANY POWDER COATED COLOUR
SALES - SERVICE - REPAIR
LEICESTER - LONDON - BIRMINGHAM
FREE Estimates | Tel Head office: 020 8843 2235 | FREE Survey

Ellis & Co Residential Sale & Letting
வீடு வாடகைக்கோ, விற்கவோ, வாங்கவோ மேலும் Mortgage தேவைக்கோ நீங்கள் உடன் தொடர்பு கொள்ளவும்
Kumar on
(T) 020 8204 3300
(F) 020 8206 1102
(M) 07984 184064
email: kenton@ellisandco.co.uk
272, Streatfield Road, Kenton, Harrow

iwfurniture.com
The Furniture Warehouse
For all your furnitures needs. sofas, dinning sets, beds + mattresses, desks, coffee tables, wardrobes + chests
0845 201 0746
wimbledon, Hayes and Perivale

B & B TIMBER & BUILDING MERCHANTS
For all your building and timber needs. Timber cut to size.
Open MON - SAT 8 am to 6 pm
WED only 8 am to 1 pm
Call 020 8574 6691
020 8571 3430
6,7,8 - North Parade, North Road, Southall

Popular Builders & Merchants
Specialist in:
Bath Shower, Shower Cubical, Jacuzzi, Steam Cabin, Vanity Units, Sanitary Ware, Wall Cladding, Plumbing, Building Material and DIY & Granite Floor Marble Tiles
020 8471 1677
293-295 High Street North, Manor Park, E12 6SL
popularbuilders@hotmail.com

Prestige Windows & Doors Ltd
Unbeatable prices & Quality
Call for free quote
Fensa Registered
T: 020 8503 4731
F: 020 8548 0466
156 - 158 KATHERINE ROAD EASTHAM LONDON E6 1ER
prestigewindows@hotmail.co.uk

லண்டன் தமிழர்களின் தரம் மிக்க பத்திரிகை உதயன்

Venus Double Glazing Co
(HOME IMPROVEMENT)
UPVC & Aluminium Replacement Windows, Patio Doors, Conservatories, Porches & Residential Doors
ESTABLISHED SINCE 1980
Showroom: Unit 5, 255 Water Road, Abbey-dale Industrial Estate, Wembley, Middlesex HA0 1JW.
FENSA
Tel: 020 8998 7710

Woodstyle Kitchens & Bedrooms Ltd
Manufacturers of Superior Bedroom, Kitchen & Bathroom Units, Doors and Assessories
East London: Unit 4A R/O 328 Romford Road (via Palmerston Road) - Forest Gate London E7 8BS
Tel: 020 8519 0100
Fax: 020 8555 1513
Essex: Unit 3 Ash Industrial Estate - Merring Way - Flex Meadow - The Pinnacles - Harlow - Essex - CM19 5TJ
Tel: 01279 442100
Fax: 01279 442500
www.woodstyleuk.com

Panesar Electrical Co.
EST 1981
- Wylex 9 Way Split Load - RCD+Main Switch - 9 MCBs ONLY £65
- Lux 10 Way Split Load - RCD+Main Switch - 10 MCBs ONLY £55
More Quality Offers in Store
362 - 364 High Street North Manor Park London E12 6PH
Tel: 020 8472 1873 Fax: 020 8471 6271

# UNBEATABLE PRICES

* TILES * MARBLE * GRANITE * KITCHENS * BATHROOM * WOODFLOORING * FURNITURE

MASSIVE SALE




MASSIVE SALE

# ELITE

ELITE TILES are undeniably UK's No.1 Importers, Distributors, Wholesalers and Retailers of




*Specialists in Granite Worktops and Marble Vanity Tops to order*




## £2 MILLION POUNDS OF AVAILABLE STOCK TO CLEAR

(collect same day)

Web Site: www.elite-tiles.co.uk

**020 8202 1806 (12 lines)**
**020 8202 8608 (Fax)**
**Elite House, The Broadway, West Hendon, London, NW9 7BP**

Open Mon-Fri 8.30am-6pm - Sat 10am-5pm - Sun 10am - 2pm




படக்காட்சிக்குப் பின் இடம்பற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டவர்களில் உரு பகுதியினர். இடமிருந்து வலம்: கெ திவ்வியராஜன் என் செல்வராஜா சிலோன் சின்னையா பரிஸ்டர் ஜோசப்

### திவ்வியராஜனின் சகா

# வன்முறைக் கலாச்சாரத்தின் பதிவு

உள்நாட்டு யுத்தத்தினால் புலம்பெயர்ந்த தமிழ் இளைஞர்கள், புலம்பெயர்ந்த நாடுகளில் உட்சமூக வன்முறைக்கு பலியாவது, தமிழ் சமூகத்தினால் ஜீரணிக்க முடியாத ஒரு யதார்த்தமாக உள்ளது. லண்டன், ரொறன்ரோ, பாரிஸ் நகரங்களின் வீதிகளில் தமிழ் இளைஞர்களின் இரத்தக் கறைகள் ஒட்டு மொத்த தமிழ் சமூகத்தின் அடையாளமாகவே மாறியுள்ளது. பல இளைஞர்களின் உயிரிழப்பிற்குப் பின்பே இப்படி ஒரு சமூகப் பிரச்சினை உள்ளது என்பதனை தமிழ் சமூகம் அடையாளம் கண்டது. அப்படி கண்டு கொண்டவர்களும் இதனை தமக்கு சம்மந்தம் இல்லாத ஒரு பிரச்சினையாகவே அணுகினர். ஆனால் கீர்த்தனன் திவ்யராஜன் 'சகா' மூலம் தமிழ் சமூகத்திற்கு ஒரு தீர்மானமான அழுத்தத்தை கொடுத்துள்ளார்.



சாதாரணமான சுழலை காட்டப்பட்டு திடீரென துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்படுவதுடன் 'சகா' ஆரம்பிக்கிறது. 13 ஆண்டுகளுக்கு முன்னோக்கிச் சென்று கதை நகர்கிறது. நிர்மல், சந்தோஷ், ரகு என்ற மூன்று இளம் வாலிபர்களின் பின்னணியில் புலம்பெயர் தமிழ் சமூகத்தில் உள்ள வன்முறையை கூற முனைகிறது 'சகா'. வெவ்வேறு குடும்பப் பின்னணியில் வளரும் இம்மூவரில் நிர்மல் - சந்தோஷ் இருவரது நட்பும் மிக நெருக்கமாக உள்ளது. இளமையிலேயே தந்தையை இழந்த நிர்மல் தாயினதும் தாத்தாவினதும் வளர்ப்பில் வளர்கிறார். சமூக மாற்றங்களை புரிந்து கொள்ளும் அப்பா, அம்மா, தங்கை என்ற குடும்பப் பின்னணியில் சந்தோஸ் வளர்கிறார். நிர்மல் - சந்தோஷ் பாலிய வயது முதல் குடும்ப நண்பர்கள். இவர்களின் கல்லூரி வாழ்வில் அம்மா அப்பாவின் சண்டைக்கு மத்தியில் தினம் தினம் வாழும் ரகுவும் வந்து இணைந்து கொள்கிறார்.

இவர்களின் வாலிப விளையாட்டுகள், காதல், இடையிடையே வந்து செல்லும் வன்முறைச் சம்பவங்கள் என காட்சிகள் அமைக்கப்பட்டிருந்தது. நிர்மல் - சந்தோஷ் எதிர்கால நம்பிக்கையுடன் தம்மைச் சார்ந்தவர்களுக்கும் நம்பிக்கையூட்டி வாழ்கின்றனர். மறுமுனையில் ரகு தீய சக்திகளின் கூட்டில் இழுபட்டு போதை ஏற்றுவதும் பின்னர் அவர்களுடன் இழுபட்டு வன்முறைகளுடனும் தொடர்புபடுகிறான். ஒரு கட்டத்தில் பொலிசாரால் கைது செய்யப்படுகிறான்.

கல்லூரி புரொஜக்ட் செய்வதற்காக நிர்மல் - சந்தோஷ் நூலகத்திற்கு செல்கிறார்கள். துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்படுகிது. நிர்மல் சந்தோஷ் துப்பாக்கி வேட்டுகளைத் தாங்கி வீழ்ந்து மடிகின்றனர். கமரா தொடர்ந்தும் குடும்பத்தின் வேதனைகளை பதிவு செய்கிறது.

படக் காட்சிக்குப் பின் நண்பர்கள் கூடியிருந்து திவ்யராஜனுடன் கலந்துரையாடினர். படத்தின் ஏற்ற இறக்கங்கள் பற்றி ஒவ்வொருவரும் தத்தம் கருத்துக்களை வெளியிட்டனர். திவ்யராஜன் தேர்ந்தெடுத்த கதைக்கருவே படத்தின் மிகப் பலமான அம்சம் என்பதை அனைவரும் ஒருமித்து ஏற்றுக் கொண்டனர். படத்தின் ஏனைய அம்சங்கள் பலவீனமாக இருப்பது சுட்டிக்காட்டப்பட்டது. தொழில்நுட்பம் குறிப்பாக ஒலி மிக மோசமாக இருந்ததுடன் படத்தை பார்க்க முடியாமல் இம்சைபடுத்தியது. ஏனைய தொழில்நுட்ப அம்சங்களிலும் கவனமெடுக்கப்படவில்லை. இது பொதுவாகவே புலம்பெயர் சினிமாவின் ஒரு குறைபாடாகவே இருந்து வருகிறது. இவற்றை சுட்டிக்காட்டிய ஈழவர் திரைக்கலை மன்றத் தலைவர் பரிஸ்டர் ஜோசப் 'சகா' ஒரு குறும்படத்திற்கான தன்மைகளையே கொண்டிருப்பதாகவும் அது குறும்படமாகவே எடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். அதே கருத்தை வெளிப்படுத்திய விம்பம் சாந்தகுணம் நிறைய இடங்களில் கத்தரிக்கோல் பயன்படுத்தியிருக்க வேண்டும் என்றும் இது 15 - 20 நிமிடங்களில் முடிக்கக் கூடிய குறும்படம் என்றும் தெரிவித்தார். சினிமா என்பது ஒரு மொழி என்று குறிப்பிட்ட சாந்தகுணம் 'சகா' வில் கமரா நகரவில்லை என்பதைச் சுட்டிக்காட்டினார். காட்சிகள் சீராக தொகுக்கப்படாமல் தொடர்ச்சியற்று இருப்பதாகவும் சாந்தகுணம் தெரிவித்தார்.

நூலகவியலாளர் என் செல்வராஜா ஒரு பார்வையாளனாக தனது கருத்தை வெளியிட்டார். 'சகா' தனக்கு திருப்தியளிக்கும் வகையில் இருந்ததாகக் குறிப்பிட்ட அவர் வன்முறைகள் காட்டப்படுகிறது ஆனால் கதை தொடர்ச்சி இல்லாமல் இருப்பதாகவும் இரு இளைஞர்களும் சுடப்படுவதுடன் படம் முடிவுக்கு வந்திருக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். அதனை ஆமோதித்த உதயன் ஆசிரியர் த ஜெயபாலன் காட்சிகளினூடாக சினிமாமொழியில் கதை சொல்லப்பட வேண்டுமே அல்லாமல் கதாபாத்திரங்கள் பார்வையாளனுக்கு ஆலோசணை சொல்லவும், விரிவுரை செய்யவும், பிரச்சாரம் செய்யவும் முற்படக்கூடாது என்று குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில் ஒவ்வொரு காட்சியும் தனித் தனியாக ஆராயப்பட்டு யதார்த்தமாக காட்சி அமைக்கப்பட்டிருப்பது உறுதிசெய்யப்பட வேண்டும் என்றும் அப்படி அமைக்க இயலாத காட்சிகளைத் தவிர்க்க வேண்டும் என்றும் தெரிவித்தார். இப்படம் மீண்டும் மீண்டும் செப்பனிடப் பட்டிருந்தால் (editing) அதன் தரம் இன்னும் அதிகரித்திருக்கும் என்பதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

ஒரு விடயத்தை கட்டுரையாக எழுதலாம், கவிதையாக வடிக்கலாம், கதையாக எழுதலாம் வெவ்வேறு வகையில் அதனைச் சொல்ல முடியும் என்று குறிப்பிட்ட ஏற்பாட்டாளர் விம்பம் கிருஷ ணராஜா திவ்யராஜன் காட்சிகளை தனத் தனி ஓவியங்கள் போல் அமைத்துள்ளார். அதனை தொகுத்து பார்க்கும் பொறுப்பை அவர் பார்வையாளனிடமே விட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

கிருஷணராஜாவின் கருத்தை ஏற்றுக் கொண்ட திவ்யராஜன் தான் ஒரு மாறுபட்ட உத்தியைக் கையாண்டதாகவும் அதனாலேயே காட்சிகளின் கோர்வையாக படம் அமைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார். இந்த சுழலில் இடம்பெறும் கொலைகள் ஏன் இடம்பெறுகின்றன? யார் இதனைச் செய்கிறார்கள்? இதன் பின்னணி என்ன? என்பன எமக்கு தெரியாமலேயே உள்ளது. அதைப் போன்றே 'சகா' வின் பார்வையாளனுக்கும் அது தெரியக் கூடாது எனத் தான் நினைத்ததாக திவ்யராஜன் தெரிவித்தார். அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டியது இந்த வன்முறை நிறுத்தப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். சில விடயங்களை அழுத்தமாகச் சொன்னால் தான் அது பார்வையாளனைச் சென்றடையும் என்பதற்காகவே தனது கதாபாத்திரங்கள் பேசுகின்றனவே அல்லாமல் அவை பிரச்சாரம் செய்யவில்லை என்றார் திவ்யராஜன். திவ்யராஜனின் 'சகா' ஒரு தரமான முயற்சி என்பதை அனைவரும் பாராட்டினர். மீண்டும் இவ்வாறான நல்ல படங்களைத் தர அவருக்கு வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

## இலக்கியச் சந்திப்பு ஒத்தி வைப்பு

லண்டனில் யூலையில் நடக்கவிருந்த 33வது இலக்கியச் சந்திப்பு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. மூன்றாவது மனிதன் ஆசிரியர் பௌசரை அழைப்பது தொடர்பான சர்ச்சையில் பிளவுபட்டுள்ள இலக்கியச் சந்திப்பு ஏற்பாட்டாளர்கள் இவ்விலக்கியச் சந்திப்பை ஒத்தி வைத்துள்ளனர். இலக்கியச் சந்திப்புக் குழு இலக்கிய விடயங்களுடன் மனித உரிமைகள், கருத்துச் சுதந்திரம் என்பவற்றுக்காகவும் குரல் கொடுத்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. தற்போது புற அரசியல் காரணிகளின் அழுத்தமும் அதிகரித்து உள்ளது. இந்நிலையில் லண்டன் இலக்கியச் சந்திப்பின் எதிர்காலம் இன்னமும் கேள்விக் குறியாகவே உள்ளது.

















லண்டனில் சிறந்த இலக்கிய விமர்சியாகத்திகழும் மாதவி சிவலீலன் யாழ் பல்கலைக்கழகத்தில் கம்பராமாயானத்தின் கதைக் கட்டமைப்புப் பற்றிய ஆய்வில் முதுகலைப் பட்டமானி பட்டம் பெற்றவர். பொன்னாலைக் கிருஷ்ணபிள்ளையின் நாடகம், பாடல், கவிதை ஆக்கங்கள் பற்றிய ஆய்வு நூல் ஒன்றையும் எழுதி வெளியிட்டுள்ளார். மாதவி சிவலீலன் நாடகவியல் அறிஞர் காரை சுந்தராம்பிள்ளையின் மகள் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் ஆய்வு நூல்களாக ஈழத்து இசை நாடக வரலாறு, இந்து நாகரிகத்தில் கலை, வி.வைரமுத்துவின் வாழ்வும் அரங்கும், சிங்களப் பாரம்பரிய அரங்கம், வட இலங்கை நாட்டார் அரங்கு, ஈழத்து மலையகக் கூத்துக்கள் ஆகிய ஆய்வு நூல்களை வெளியிட்டுள்ளார்.

# மாதவி சிவலீலனுடன் சந்திப்பு

நவஜோதி யோகரட்ணம்



*நவஜோதி: புகலிடத்தில் பெண் எழுத்துக்களைப் பற்றி என்ன கருதுகிறீர்கள்?*

மாதவி: ஈழத்தில் இருந்து பெரும்பாலான தமிழ் பெண்கள் திருமணம் என்ற பந்தத்திற்காகத்தான் ஐரோப்பிய நாடுகளை நோக்கிப் புலம் பெயர்ந்து வந்து கொண்டிருக்கிறார்கள். குறிப்பிட்ட ஒரு வாழ்வியல் முறைமையில் வாழ்ந்தவர்கள் இந்நாடுகளில் அந்நியப்பட்டுப் போகிறார்கள். உடல் ரீதியிலும் உளரீதியிலும் பல உளைச்சல்களை எதிர் நோக்குகின்றார்கள். இவை எல்லாவற்றிற்கும் தீர்வாக ஒரு சில பெண்கள் எழுத்தை வரித்துக் கொண்டு தங்கள் உணர்வுகளை வெளிக் கொணர்கிறார்கள். இவர்களது உண்மையான அனுபவ வெளிப்பாடு பொய்மையற்ற எழுத்துக்களாக வந்து கொண்டிருக்கின்றன. உதாரணமாக நீங்கள் அண்மையில் வெளியிட்ட 'எனக்கு மட்டும் உதிக்கும் சூரியன்' என்ற கவிதைத் தொகுப்பில் பெண்ணின் மன வெளிப்பாடுகளைப் பார்க்கின்றேன்.

*நவஜோதி: புலம் பெயர்ந்த நாடுகளில் காணப்படும் பெண்ணியப் போக்கை நீங்கள் எவ்வாறு நோக்குகிறீர்கள்?*

மாதவி: உண்மையான பெண் விடுதலை, பெண்ணியம் போன்ற போக்குகள் உண்மையான பெண்கள் முன்னேற்றத்தை நோக்கியதாக அமையவேண்டும். வெறும் பொழுது போக்கு அம்சமாக அல்லாது தங்களது புகழ்ச்சிகளை வெளிக் கொண்டு வரும் சந்தர்ப்பமாக அதனை எடுத்துக் கொள்ளாமல் இருப்பது நல்லதாகும்.

நவஜோதி: பெண்ணியம் என்று நீங்கள் எதைக் கருதுகிறீர்கள்?

மாதவி: பெண்ணின் உரிமைகள் மறுக்கப்பட்டு ஒடுக்கப்பட்ட நிலையில் அந்த உரிமைகளுக்காக வைக்கப்படுகின்ற நியாயமான கருத்துக்கள் பெண்ணியத்தில் அடங்கும். ஒரு பெண் தன்னைச் சூழ உள்ள புற அழுத்தங்களில் இருந்தும் தனக்குள் இருக்கும் மன அழுத்தங்களில் இருந்தும் விடுபடுதல் வேண்டும். முழு மனித விடுதலையின் போதுதான் பெண் விடுதலையும் சாத்தியமாகும். பெண் மட்டும் கூச்சல் போட்டுப் பயனில்லை. அவளது பிரச்சனைகள் தீர்க்கப்படவேண்டும் என்று உணர்ந்து சமூகம் செயற்படவேண்டும். தனி மனித சுதந்திரத்தை ஏற்றுக் கொள்ளுகின்ற போது பெண் தான் சுதந்திரமானவள் என்ற உணர்வைப் பெற்றுக் கொள்வாள்.

*நவஜோதி: பெண்களின் விடுதலை என்ன என்பது பற்றிக் என்ன கூற நினைக்கிறீர்கள்?*

மாதவி: புலம்பெயர்ந்த சூழலில் குறிப்பிட்ட சில தமிழ்ப் பெண்கள் சினிமா, தமிழ் தொலைக்காட்சிகள், திருமணம், பிறந்தநாள் வைபவங்கள் என்பவற்றோடு திருப்தி அடைகிறார்கள். அதே சமயம் தங்களுக்குக் கிடைத்த வசதி வாய்ப்புக்களை பயன்படுத்தி மேலும் மேலும் முன்னேற முயல்கின்ற பெண்களையும் இச் சூழலில் காணக்கூடியதாக இருக்கின்றது. ஆனால் இவர்களிடையே பெண்ணியம் பற்றிய விழிப்புணர்வு பெருமளவு இல்லையென்றுதான் சொல்லலாம்.

*நவஜோதி: நவீன இலக்கியங்கள் பற்றிய ஆராய்ச்சியே முக்கியம் பெறும் இன்றைய காலகட்டத்தில் நீங்கள் உங்கள் இலக்கிய ஆய்வுக்கு கம்பராமயானத்தை தெரிவு செய்துள்ளீர்கள். ஏன் அதைத் தெரிவு செய்தீர்கள்?*

மாதவி: பழந்தமிழ் இலக்கியங்களிலே எனக்கு மிகுந்த ஈடுபாடு இருந்தது. இவற்றையெல்லாம் உள்வாங்கித்தான் கம்பன் தனது இலக்கியத்தை ஆக்கியிருந்தான் என்று தெரிந்தபோது கம்பராமாயனம் முழுவதையும் கற்க வேண்டும் என்று விரும்பிக் கொண்டேன். அத்தோடு வி.வி.எஸ். ஐயரின் கம்பராமாயனம் ஒரு ஆய்வு என்ற ஆங்கில நூலும் இந்த ஆய்வினை நான் செய்வதற்கு தூண்டு கோலாய் அமைந்தன.



நவீனத்துவத்தை எவ்வளவு தூரம் கற்கின்றோமோ அதே அளவு முன்னைய இலக்கியங்களின் அறிவும் நாங்கள் பெற்றுக் கொள்வது தமிழ் இலக்கிய அறிவுக்கு மிக முக்கியமாகையால் நான் பழைய இலக்கியங்களில் ஆய்வை மேற்கொண்டேன்.

*நவஜோதி: கம்பனின் தனித்துவம் என்ன நீங்கள் எதனை கருதுகின்றீர்கள்?*

மாதவி: கம்பனின் தனிப்பட்ட வாழ்வு முறைமையில் அவன் ஒரு வைணவன். ஆட்சி அதிகாரத்துக்கு எதிரானவன். பொதுவுடைமை நோக்கு உடையவன். மிகச் சிறந்த கல்வியாளன். இது தவிர அவருடைய இலக்கியத் தளங்கள் என்று பார்க்கின்ற போது மதப் பாரம்பரியம், ஆட்சி அதிகாரம், தமிழ் உணர்வு, சமதாய நோக்கு, மனித நேயப் பண்பு என்பவற்றை கொண்டதாக அமைந்திருக்கிறது. வான்மீகியிடமிருந்து இராம கதையை எடுத்துக்கொண்டாலும் தமிழ் இலக்கிய பாரம்பரியத்துக்கூடாகவே அக்கதையைச் சொல்லியிருக்கின்றார். தெளிவாகக் கூறுவதாயின் இந்தியா முழுவதற்கும் தெரிந்த ஒரு கதையை எடுத்து அதனை தமிழ் நிலைப்படுத்தித் தந்திருக்கிறார்.

*நவஜோதி: பொன்னாலை கிருஷ்ணபிள்ளை அவரின் நாடகம், பாடல், கவிதை பற்றி ஆராய்ந்து நூலை வெளியிட்டிருக்கிறீர்கள்? இவர் கூட பெரிதாக இலங்கையில் அறியப்படாதவர் என எனக்குத் தோன்றுகிறது. அவரைப்பற்றி ?*

மாதவி: பொன்னாலைக் கிருஷ்ணபிள்ளை ஒரு கூத்துக் கலைஞர். இயல்பாகக் கவி இயற்றும் ஆற்றல் கொண்டவர். தான் வாழ்ந்த காலத்தில் சமுதாயத்திற்குத் தேவையான கருத்துக்களை முன் வைத்தவர். தமிழ் தேசியம் பற்றிக் கூறிய முன்னோடிகளில் ஒருவர். நாடக மேடைப் பாடல்கள் ஊடாக சமுதாயக் கருத்துக்களினை பாமர மக்களும் விளங்கிக் கொள்ளத் தக்க முறையில் எடுத்துச் சொன்ன முன்னோடிகளில் ஒருவராகவும் கருதத் தக்கவர். இவற்றின் அடிப்படையில் ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்று ஆய்வில் அவசியமானவர் என்ற அடிப்படையில் தேவை என்ற அடிப்படையில் அவரை எடுத்து ஆய்வு செய்திருந்தேன்.

( இப்பக்கத்தில் மற்றுமொருவருடன் அடுத்த இதழில் சந்திப்போம். )

## இசை நிகழ்வு

கர்நாடக இசையுலகில் தனக்கென ஓரிடத்தைப் பெற்ற மணக்கால் எஸ் ரங்காராஜனின் இசை நிகழ்வு யூலை 14ல் லூசியத்தில் இடம்பெற்றது. இவருடன் திருமதி பத்மா ரங்கராஜனும் பாடியிருந்தார். திருமதி சிவலிங்கம் நாகலிங்கம் அவர்களின் 80வது பிறந்த தினத்தையொட்டி இவ்விசை நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பேரப்பிள்ளைகளான ஜனகன் ஸ்ரீகெங்காதரன், கார்த்திக் ஸ்ரீதரன், ஸ்ரீசி ஸ்ரீதரன், பொன்னி சபேசன், பாரிதி சபேசன் விழாவுக்கு அழைப்பு விடுத்திருந்தனர்

# குழந்தை வளர்ப்பு : வைத்தியப் பழமொழிகள்

தொகுப்பு - சௌமியன்

ஒரு அன்னை தன் பிள்ளையைப் பாலூட்டித் தாலாட்டி வளர்த்து வருகிறாள். குழந்தை நோயுறவே கண் கலங்கித் தவிக்கிறாள். வைத்தியரிடம் கொண்டு செல்லக் காலம் தாழ்த்தாமல் நடவடிக்கை எடுக்கிறாள். எல்லாத் தாய்மாராலும் முன்பு வைத்திய வசதியைப் பெற முடிந்ததில்லை. வைத்தியர் பற்றாக்குறை, நிதியின்மை, போக்குவரத்து வசதியீனம், அதிக தூரம் ஆகியவற்றால் முதியோரிடம் கேட்டு அரிய பழமொழிகள் மூலம் கைவைத்தியம் நாடினர். அதன் மூலம் தற்காலிக அல்லது நிரந்தர நிவாரணம் தேடினர். வைத்தியரிடம் செல்லு முன் கைவைத்தியம் பார்ப்பது அன்று தொட்டு பொதுவான நடைமுறையாக உள்ளது. குழந்தை வளர்ப்பு தொடர்பான பலவேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், சிறு கை வைத்தியங்கள் என்பனவும் அனுபவத்தால் பெற்ற அறிவால் இரத்தினச் சுருக்கமாக பழமொழி வாயிலாகத் தெரிவிக்கப்பட்டு காலம் காலமாக தம் சந்ததியினருக்கு பெரியோர்களால் கடத்தப்பட்டுள்ளது. அவற்றில் சிலவற்றை இங்கு நோக்குவோம்.

'சிறுபிள்ளை இல்லாத வீடு வீடல்ல', 'சீரகம் இடாத கறி கறியல்ல' எனும் பழமொழி ஒரு குடும்பத்தில் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டுள்ள முக்கியத்துவத்தையும் சமையலில் சீரகத்தின் அவசியத்தையும் உணர்த்துகின்றது.

குழந்தை வளர்ப்பில் 'தாய்ப்பாலே சிறந்த ஆகாரம்' என சுகாதார சேவையினர் உலகம் முழுவதும் பிரச்சாரம் செய்கின்றனர். புட்டிப்பால் குழந்தைகளை விட தாய்ப்பால் குழந்தைகளே வலுவாயும், நோய் எதிர்ப்புடனும், போசாக்குடனும் விளங்குகின்றன என்பது உலக நாட்டு வைத்தியர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயம். தாய்ப்பால் அதிகம் சுரந்திட எந்த மூலிகைகளை உண்ண வேண்டும் எனவும் பழமொழிகளின் ஊடாக கூறப்பட்டுள்ளது. முலைப்பாலின் பல்வேறு பயன்களையும் அவை கூறத் தவறவில்லை.

'அரிவையர் முலைப்பாலருந்தவூன் சித்தி' எனும் முதுமொழி மாதர்கள் முலைப்பாலருந்த தேகவலு பெறுவர் என்கிறது. 'ஏந்திழைக்கீருள்ளி ஏற்ற முலைப்பாலேவ' எனும் பழமொழி குழந்தைக்கு ஊட்ட பால் அற்றோர் 3 களஞ்சு உள்ளிப் பூண்டை உடைத்து, தோல் நீக்கி, வறுத்து, அதனோடு பனங் கட்டியும் சேர்த்து உண்டால் அதிக தாய்ப்பால் சுரக்கும் என்பது தமிழ் வைத்திய விளக்கமாகும். (வைத்தியக் கைமுறைகள் - சு.சிற்றம்பலம் யாழ்ப்பாணம் 1938). வாய்வுச் சேஷ்டைகட்கும் உள்ளி வறுத்தும் சுட்டும் உண்ணாதவர் எம்மிடையே இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

'தண்ணீர் முட்டானைத் தழுவப் பால் சுரக்கும்' எனும் பழமொழி தண்ணீர் முட்டான் கிழங்கைத் தாய்மார் தம் மார்புடன் அணைத்து தழுவி வருவாராயின் பால் சுரப்பது அதிகரிக்கும் என்கிறது.

மீன் வகையில் தாய்மார் பால்சுறா உண்பது பால் சுரப்புத் தன்மையை ஊக்குவிக்கும். இதனையே 'மீனிற் சுறா வெகுமுலைப்பால் தரும்' என்றனர். குழந்தையின் வாழ்வில் தாய்ப்பாலின் மிக அவசியத்தை விளக்கவே நம்மவர் இப்படிக் கூறி வைத்தனர்.

'மைந்தரை வளர்க்கும் மணித்தக்காளி' எனும் பழமொழி அன்னையைக் கூட தம்மகவை வளர்க்க வழிசொல்கிறது.

'நீண்ட வாழ்வுக்கு நெல்லிக்கனி' எனக்கூறும் முதுமொழி அதுவே அளவை மீறும் போது ஆபத்து என 'அளவுக்கு மீறினால் அமுதமும் விஷம்' என்பது போல் 'நெல்லியின் பெயரை அல்லினிற் கூறாதே' என்கிறது. அதாவது இராப்பொழுதில் நெல்லிக் கனியை உண்ணச் சிறுவர்களை அனுமதிக்கக் கூடாது என்கிறது.

மேற்கு வைத்தியம் தீர்வு சொல்லாத விடயங்களுக்கு நம் வைத்தியம் தீர்வு கூறலாம். அது பற்றிய அரிய, பழைய, புதிய, தெரிந்த, தெரியாத தகவல்களை நாம் சர்வதேச தமிழர் சஞ்சிகை மூலம் பரிமாறிக் கொள்ள வேண்டும் என உலகெங்கும் வாழும் தமிழ் அறிஞர்கள், சித்த ஆயுர்வேத, மேல் நாட்டு வைத்தியர்களை அன்புடனும் உரிமையுடனும் அழைக்கிறோம். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பது தமிழர்களுக்கு கடுமையான நோய் வந்த பின் தான் உறைக்குமா?

## தமிழ் ஒளி செபாரத்தினம் லண்டன் வருகிறார்

தற்போது கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் வித்துவான் தமிழ்ஒளி க.செபரத்தினம் எதிர்வரும் ஓகஸ்ட் 2006இல் லண்டன் வரவிருக்கிறார். இவர் அண்மையில் தமிழ்நாடும் ஈழத்துத் தமிழ்ச் சான்றோரும் என்ற நூலை வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது. இந்நூல் தமிழியல் முயற்சிகளில் வீறுகொண்டு செயற்பட்ட 24 அறிஞர்களைப் பற்றியது என்பது குறிப்பிடத்தக்கது.

ஈழத்தில் மட்டக்களப்புக்குத் தெற்கே தம்பிலுவில் என்னும் கிராமத்தைப் பிறந்த இடமாகவும் பழுகாமம் என்ற கிராமத்தை வாழ்ந்த இடமாகவும் கொண்டிருந்த வித்துவான் கனகரத்தினம் செபரத்தினம் 24ம் திகதி செப்டெம்பர் 1930இல் பிறந்தவர். தமிழாசிரியரான இவர் இலங்கை பல்கலைக்கழகத்தின் வித்துவான் பட்டம் பெற்றவர். 1958இல் அன்ரன் செக்கோவின் □கரடி□ என்ற ஓரங்க நாடகத்தைத் தமிழாக்கம் செய்ததன் மூலம் ஈழத்து படைப்புலகில் நுழைந்தவர்.

நூல் வெளியீடுகளுக்கு அப்பால் இலங்கை சாகித்திய மண்டலத்தின் தற்கால கவிதைக் குழுவின் உறுப்பினராகவும், கிழக்கிலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கப் பொதுச் செயலாளராகவும், மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கப் பொதுச் செயலாளராகவும், கனடா சுவாமி விபுலாநந்தர் கலைமன்றத் துணைத்தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

பயிற்றப்பட்ட ஆசிரியரான வித்துவான் க.செபரத்தினம் தற்போது கனடாவில் ஒன்ராரியோ மாநிலத்தின் ஸ்காபரோ பகுதியில் வாழ்ந்து வருகின்றார். இவர் தன் வருகையின்போது இலக்கிய ஆர்வலர்களையும், தனது பழைய மாணவர்களையும் சந்திக்க விரும்புவதாகத் தெரிவித்திருக்கின்றார்.

## தேர்த் திருவிழா

பாரிஸ் ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயத்தின் தேர்த்திருவிழா செப்ரம்பர் 3ல் நடைபெறவுள்ளது. பாரிஸில் மிகப் பெருமளவில் இடம்பெறும் இத்தேர்த் திருவிழாவில் 20,000க்கும் அதிகமான பக்தர்கள் கலந்து கொள்வது குறிப்பிடத்தக்கது. ஓகஸ்ட் 21ல் ஆரம்பிக்கும் திருவிழா செப்ரம்பர் 4 வரை நடைபெறும். ஐரோப்பியர்களும் கலந்துகொள்வது வழமை.

## தமிழுக்காக தமிழர்களுக்காக

பொ சிவக்குமார்

தமிழர்களுக்காக தமிழுக்காக என்பது எழுந்தமானமாக அர்த்தம் இல்லாமல் பயன்படுத்தப்படுகிறது. தமிழ் ஊடகங்களிலும் கூட்டங்களிலும் இவ்வாக்கியங்கள் அள்ளி வீசப்படுகின்றன.

சமூக சேவை என்பதற்கான விளக்கத்தை அவரவர் தங்கள் இஷ்டத்திற்கு ஏற்ற விதத்தில் கொடுக்கின்றனர். வீதி துப்பரவு செய்பவர்கள் முதல் விண்வெளிக்குச் செல்லும் விண்வெளி வீரர்கள் வரை அனைவரும் ஊதியம் பெறுவதுடன் சமூகத்திற்கு சேவை செய்கின்றனர். ஆனால் இவர்கள் சமூகசேவை செய்வதாக கூறிக்கொள்வதில்லை.

ஆனால் ஊதியம் அல்லது இலாபம் பெறும் பொது அமைப்புகளில் உள்ளவர்கள் அல்லது சில தமிழ் பொது அமைப்புகள், கல்வி நிறுவனங்கள் அறிவூட்டுகிறோம், அகதிகளுக்கு உதவுகிறோம், இருக்க இடம் கொடுக்கிறோம் என்று தங்களை சமூக சேவையாளர்களாகவோ சமூக சேவை அமைப்புகளாகவோ காட்டி இலாபமீட்ட முற்படுகின்றனர்.

மேலும் சிலர் கலை வளர்க்கிறோம் தமிழ் வளர்க்கிறோம் என்று பாட்டுக்கு பாட்டும் கானக் குயிலும் இன்னிசைமாலையும் நடத்துகின்றனர். இவை இலாபமீட்ட செய்யப்படுகின்றனவே அன்றி கலைகளை வளர்க்க செய்யப்படுவதில்லை.

வானொலியோ தொலைக் காட்சியோ பத்திரிகை, சஞ்சிகைகளோ சமூக சேவை என்பதற்கு அப்பால் அவற்றுக்கு பொருளாதார அரசியல் நோக்கங்கள் உண்டு.

பொருளாதார நோக்கில் விடயங்களை அணுகுவதில் எந்தத் தவறும் இல்லை. ஒவ்வொருவரது வாழ்வுக்கும் பொருளாதாரம் அவசியம். பொருளாதார ரீதியில் வெற்றிகரமாகச் செயற்பட்டால் தான் எதிர்காலத்தில் தங்களை தக்க வைத்துக் கொள்ள முடியும். ஆனால் பொருளாதாரம் மற்றும் இலாபங்களுக்காக செய்யப்படுவனவற்றை சமூக சேவையாகக் காட்டி இலாபமீட்ட முற்படுவது நியாயமானதல்ல.

சமூகத்தில் நல்ல உள்ளம் கொண்ட சிலர் எந்த இலாபத்தையும் எதிர்பாராது எந்த பிரதி பலனையும் எதிர்பாராது தம்மை பொது விடயங்களில் ஈடுபடுத்தி உள்ளனர். ஆனால் இவர்களது குரல்கள் வெளி வருவதில்லை. ஆனால் சேவையாளர்களாகக் காட்டிக் கொள்பவர்கள் தங்களை விளம்பரப்படுத்துவதில் வெற்றி கண்டு உள்ளனர்.

சமூகத்தில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஸ்தாபனமும் கடைமைகளைச் சரிவரச் செய்ய வேண்டும். சமூக சேவை செய்யப்படுகிறதா இல்லையா என்பதை சமூகம் தெரிவிக்கும். சமூக சேவை செய்கிறோம் என்று நமக்கு நாம் முத்திரை குத்திக் கொள்ள வேண்டிய அவசியமில்லை.

## ...ம் பக்கத் தொடர்ச்சி.. வைக்கோவும் அவரது சந்தர்ப்பவாத அரசியலும்

பின்பு மூப்பனார் மூலம் காமராஜரை கண்ட திருமாவளவன் பின்பு திருவள்ளுவராக கருணாநிதியை கண்டார். தேர்தலில் வெற்றிபெற்றார். பாராளுமன்றத்துக்கு சீற் இல்லை என்பதால் எம்.எல்.ஏ பதவியை ராஜினாமா செய்தார்.

பா.மா கட்சியுடன் தமிழ் ஆர்வலர்களின் முன்முயற்சியால் இணைந்து செயல்படத் தொடங்கியதுடன் மீண்டும் தி.மு.கவில் இடம்பிடிக்க இயலாத சூழலில் அ.தி.மு.க வில் பழைய உறவுகளை புதுப் பித்துக்கொண்டார். தற்போது 2 எம்.எல்.ஏக்களை வெற்றிபெறச் செய்துள்ளார்.

பாரதிய ஜனதா கட்சியோ சங்கராச்சாரியார் கைதையொட்டியும் தமிழகத்தில் ஜெயலலிதா எதிர்ப்பினாலும் தன்னை நியாயவாதியாக காட்டிக்கொள்ளவும் இந்த முறை யாரும்(தி.மு.க, அ.தி.மு.க) தன்னை சுமக்க போவதில்லை என்று தெரிந்த பின்பு வெற்று அறிக்கைகளை விட்டுக் கொண்டும் தனது உட்கட்சி விவகாரங்கள் வெளிவந்து நாறிப்போன நிலையில் எந்தவித செல்வாக்கும் இல்லாமல் டிப்போசிற்றை இழந்த நிலையில் உள்ளது. தனது மதவெறி முகமூடியை மறைக்க முயன்று தோற்றுப்போயுள்ளது.

காங்கிரஸ் கட்சியோ மத்தியில் ஆட்டம் காணாத வகையில் தி.மு.க அதன் உறவு கட்சிகளின் உதவியுடன் ஆட்சியை பாதுகாத்து வருகிறது. தமிழகத்தில் நம்பகமான கட்சியாக தி.மு.க திகழ்வதால் அதனுடன் உறவை நீடிக்கவே விரும்புகின்றது. தமிழகத்தில் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்களை விட அதன் தலைவர்கள் அதிகம் என்பதால் தி.மு.க ஆதரவு தலைவர்களும் அ.தி.மு.க ஆதரவு தலைவர்களும் இரண்டாக பிரிந்து ஏதாவது ஒரு கட்சியுடன் தங்களை இணைத்துக் கொள்வது என்பது வாடிக்கை. தமிழகத்தின் சிறப்பு அம்சம் என்னவெனில் திராவிட கட்சிகளுக்கு ஆதரவாக தேசிய கட்சிகளில் இரு பிரிவுகள் எப்போதும் இருக்கும். தேர்தல் நேரத்தில் இது வெளிப்படையாகவே வெளிப்படும். திண்டிவனம் ராமமூர்த்தியை(முன்னாள் காங்கிரஸ் ? தலைவர்) அ.தி.மு.க சார்பாக அறிக்கை விடவைத்து பின்பு அவர் தனிக்கட்சி ஆரம்பித்து பின்பு அவருடைய காங்கிரஸ் கட்சிக்கு ஜெயலலிதா ஒரு சீற் கூட கொடுக்க மறுத்ததும் ராமமூர்த்தி ஜெயலலிதாவுக்கு எதிராக வேட்பாளரை நிறுத்தியது எல்லாம் இந்த ஆண்டு தேர்தலில் சிறந்த நகைச்சுவை. காங்கிரஸ்காரர்கள் சட்டை இல்லாமல் கூட இருப்பார்கள். ஆனால் பதவி இல்லாமல் இருக்க மாட்டார்கள் என்பது காங்கிரசில் உள்ள பழமொழி. ஆட்சியில்(தி.மு.க) பங்கு வேண்டும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் எம்.எல்.ஏ கூட்டத்தில் தற்போது தீர்மானம் போட்டுள்ளார்கள். இது எந்த அளவுக்கு நடைமுறை என்பது அவர்களின் ஒப்பந்த தலைவி சோனியாவின் கையிலே உள்ளது.

பா.ம கட்சி ராமதாஸோ மத்தியில் தனது மகன் அன்புமணிக்கு அமைச்சர் பதவி கிடைத்த நிலையில் முழு மனநிறைவுடன் இருக்கிறார். தேன்கூட்டை கலைக்க தற்போது விரும்பமாட்டார் என்பதால் தற்போது அடங்கி வாசிக்கிறார். இவரும் வைகோவிற்கு சளைத்தவர் அல்லர். ஜெயலலிதாவின் 5 ஆண்டு கால ஆட்சியில் தமிழக மக்கள் எதிர்கொண்ட சவால்கள் ஏராளம். அரசு ஊழியர்களை வீட்டுக்கு அனுப்பியது, தாழ்த்தப்பட்ட மக்கள் மீதான அடக்குமுறை, மோதல் படுகொலைகள், மதமாற்ற தடைச்சட்டம், பொடா சட்டத்தின் கீழ் ஏராளமான ஜனநாயகவாதிகளையும் போராளி அமைப்புகளையும் சிறைப்படுத்தி கொடுமைப்படுத்தியது, விலைவாசி உயர்வு, போலீஸ் அராஜகம் இப்படியாக பாசிச ஆட்சியில் மக்கள் எதிர்கொண்ட இன்னல்கள் ஏராளம். தேர்தலை ஒட்டி அவசரமாக சில சட்டங்களை திரும்ப பெற்றாலும் மக்கள் நம்ப தயாராக இல்லை என்பதையே இந்த தேர்தல் முடிவு காட்டுகிறது. சினிமா வட்டாரங்களை தன்பக்கம் வளைத்துப்பிடித்து வந்த போதிலும் கவர்ச்சிக்கு யாரும் மயங்கவில்லை என்பது நிருபணம் ஆகியுள்ளது. சரத்குமார் போன்ற திடீர் அரசியல் தலைவர்களும் வைகோ பாதையில் சென்று ஜெயலலிதாவை ஆதரித்த போதிலும் பயன் எதுவும் இல்லாமல் போய்விட்டது. இதில் அரசியல் ஆதாயங்களை விட மற்ற ஆதாயங்கள் கிடைத்தது தான் இத்தேர்தலில் நடைபெற்ற அரசியல் நிகழ்வு. விஜயகாந் தன்னை அரசியலில் ஈடுபடுத்துவதற்கு முன்பே பல்வேறு தயாரிப்பு பணிகளை நடத்தி வந்தார். தனது மன்றங்கள் மூலம் தன்னை தலைவராக வெளிக்காட்ட ஏகப்பட்ட விளம்பரங்கள் செய்யப்பட்டன. பாரதிய ஜனதாவின் செல்லப்பிள்ளையான விஜயகாந் தன்னை கறுப்பு எம்.ஜி.ஆராக காட்டிக்கொண்டாலும் அவரது அரசியல் பாணிகள் அனைத்தும் பாரதிய ஜனதாவின் நடவடிக்கைகள் போலவே இருக்கின்றன. இவருடைய பின்னணி மிக விரைவில் வெளிப்படும்.

மக்களின் துயரங்களில் எக்காலங்களிலும் தன்னை இணைத்துக் கொள்ளாமல் விளம்பர வெளிச்சத்தின் மூலம் வெற்றி பெறலாம், ஆட்சியை கைப்பிடிக்கலாம் என்று கறுப்புபண தைரியத்தில் களத்தில் இறங்கியுள்ளார். மக்களும் மாற்று அரசியல் கட்சி இல்லாத நிலையில் இவருக்கு வாக்கு அளித்துள்ளனர். கிருஷ்ணசாமி போன்ற தலித் தலைவர்கள் கட்சி ஆரம்பித்த உடன் சில இடங்களில் பெரிய கட்சிகளின் தோல்விக்கு இவர்களின் வாக்கு வங்கி அதிர்ச்சியை ஏற்படுத்தியது. பின்பு இவர்களின் அரசியல் நிலைப்பாட்டினால் அது மாறிப்போனது.

அதே நிலையில் தான் இன்று விஜயகாந்தின் கட்சி கூட சில இடங்களில் குறிப்பிட்ட வாக்குவங்கிகளை வாங்கி இருப்பது தற்போதைய அரசியல் கட்சிகளின் மீதான அதிருப்தியே என்பதை வெளிக்காட்டி உள்ளது. இனி இவருடைய செயல்பாட்டை பொறுத்து தான் இவருடைய அரசியல் எதிர்காலத்தை அவதானிக்க முடியும்.

ரஜினி ரசிகர்களை ஜெயலலிதா விலைக்கு வாங்கியதால் தனது கட்டுப்பாட்டை இழந்த நிலையில் இத்தேர்தலில் மௌனம் காத்து எந்த அறிவிப்பும் வெளியிடாமல் அமைதியாகிவிட்டார்.

இறுதியாக தனது தனிக்கட்சி பெரும்பாண்மையுடன் ஆட்சியை நடத்தி வந்த தி.மு.க கடந்த கால நிகழ்வு போல இப்போது இல்லாமல், கூட்டணி தயவுடன் தான் இனி காலத்தை தள்ள வேண்டும். இதுவும் ஒரு ஆரோக்கியமான நிலை தான். தனது தனிப்பட்ட அதிகாரம் யாரையும் கட்டுப்படுத்தாததால் தான்தோன்றித்தனமாக இருந்த நிலை மாறி இன்று கூட்டணிகளிடம் கடிவாளங்களை கொடுத்த நிலையில் தி.மு.க உள்ளது. தனது தேர்தல் வாக்குறுதிகளை எந்த வகையில் நிறைவேற்றப் போகிறது என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். அதிகாரத்தில் சுகம் கண்டவர்கள் 5 ஆண்டுக்கு பிறகு மீண்டும் அதிகாரத்தை அடைந்த உடன் தனது கை அரிப்புகளை எவ்வாறு கட்டுப்படுத்துவார்கள் என்பது கேள்விக்குறியே. கருணாநிதியே கூறியது போல் தேன் எடுத்தவன் புறங்கையை நக்குவான் என்பது அரசு சுகம் கண்டவன் லஞ்சம் வாங்குவதை தவிர்க்க இயலாது என்று தனக்கே உரிய தமிழ் வாஞ்சையுடன் கூறியிருந்தார். ஆதலால் இவர்களிடம் தூய ஆட்சியை எதிர்பார்ப்பது என்பது கானல்நீரே. வலுவான மாற்று சக்திகள் உருவாகாத நிலையில் இந்த அரசியலில் நீந்தி எதையும் பெறமுடியாது.

## கடுகதி நூல் வியாபாரம்

விமல்ராஜ்

கடுகதி வேகத்தில் நூல்களை வெளியிட்டு வியாபாரம் செய்யும் முறை மீண்டும் லண்டனில் அரங்கேறுகிறது. சமூக அந்தஸ்தைப் பெற வேண்டும் தமது எழுத்துக்கள் எப்படியாவது நூலுருப் பெற வேண்டும் என்று தவிக்கும் சில எழுத்தாளர்களிடம் அவர்களின் எழுத்துக்களையும் பெற்று அதனைப் பதிப்பிப்பதற்கான செலவையும் பெற்று நூல்களை வெளியிட்டு வரும் மணிமேகலைப் பிரசுரம் மிக மோசமான தரத்துடன் நூல்களை பதிப்பித்து வருகின்றது. இம்மணிமேகலைப் பிரசுரம் எழுத்தாளர்களை மோசமான முறையில் சுரண்டுவதாகவும் குற்றம்சாட்டப்படுகிறது

புத்தகங்களை வெளியிடுவதற்கும் பணம்பெற்று வெளியிட்டு வரும் பணத்தையும் தானே பெற்றுக் கொள்வதாகவும் மணிமேகலைப் பிரசுராலயத்தைச் சேர்ந்த ரவி தமிழ்வாணன் மீது குற்றம்சாட்டுகின்றனர்.

யூலை 29ல் மணிமேகலைப் பிரசுராலயத்தின் 10 நூல்கள் ரூற்றிங்கில் வெளியிடப் பட உள்ளது. மேற்கத்தைய விஜயத்தை மேற்கொண்டுவரும் ரவி தமிழ்வாணன் எழுத்தாளர்களின் ஆதங்கத்தை வைத்து தன் பொக்கற்றை நிரப்புவதாக இலக்கிய ஆர்வலர்கள் பலரும் குற்றம்சாட்டுகின்றனர். தமிழகத்தில் எத்தனையோ சிறந்த பதிப்பகங்கள் இருந்தும் அவை புலம்பெயர்ந்த எழுத்தாளர்களுக்கு அறிமுகம் இல்லாதவையாகவே இருக்கின்றன.

ரவி தமிழ்வாணன் இலங்கையில் வெளியீட்டு விழாவிற்குச் சென்றபோதும் அவருக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

**உண்மை ! நடுநிலை ! மக்கள் நலன் !**

# கலைஞரின் வாழ்த்துப் பெற்ற சரவணபவனின் ஜேர்மன் - தமிழ் அகராதி



யூனில் கனகசபாபதி சரவணபவன் வெளியிட்டுள்ள ஜேர்மன் அகராதி வெளிவந்துள்ளது. 2,302 பக்கம் தொண்ட பாரிய தொகுப்பாக வெளிவந்துள்ள இவ்வகராதியில் சுமார் ஒரு லட்சம் சொற்களுக்கான பொருள் விளக்கங்கள், 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விளக்க வாக்கியங்கள் மாணவர்களுக்கான பயனுள்ள பின்னிணைப்புகள் என்பன உள்ளது. இந்தப் பாரிய அகராதியை திருக்கோணமலை வெளியீட்டாளர்கள் என்ற தனது வெளியீட்டு நிறுவனத்தின்மூலம் சரவணபவன் தமிழகத்தில் அச்சிட்டு வெளியிட்டுள்ளார். 10 சென்ரிமீட்டர் தடிப்புள்ள இந்தப்படைப்பு சரவணபவான் இதுவரை வெளியிட்ட அகராதிகளில் பாரிய படைப்பாக உள்ளது.

புலம்பெயர்ந்த வாழும் சூழலில் தேவையான உசாத்துணை மூலநூல்களை உடனுக்குடன் பெற்றுக்கொள்வது என்பது மிகவும் சிரமமான காரியமாகும். இந்நிலையிலும் சரவணபவனின் அயராத முயற்சியின் பயனாக இந்த அகராதி வெளிவந்திருப்பது போற்றத்தக்க விடயமாக கருதப்படகிறது.

கனகசபாபதி சரவணபவன் திருக்கோணமலையிலிருந்து 1980களில் ஜேர்மனிக்குப் புலம்பெயர்ந்தவர். 1992இல் முதலாவது ஜேர்மன் - தமிழ் அகராதியை வெளியிட்டார். 10 வருடகாலத்துக்குள் ஜேர்மன் மொழியில் தேர்ச்சி பெற்று அவ்வகராதியை அவர் வெளியிட்டுள்ளார். இதற்கு உதவியாக இவர் கற்றுத்தேறிய பேராதனை பல்கலைக்கழக விரிவுரையாளர்களும், இவர் ஜேர்மனியில் மொழிபெயர்ப்பாளராகக் கடமையாற்றிய கிளிவ் நகர எல்லைப் பாதுகாப்பு குற்றத்தடுப்புப் பணியகத்தின் ஊழியர்களும் இருந்துள்ளனர்.

1994இல் தமிழ் - தமிழ் - ஜேர்மன் அகராதி வெளியிடப்பட்டது. இவரது மூன்றாவது அகராதி நூல் டச்சு - தமிழ் - தமிழ் - டச்சு அகராதியாகும். டச்சு மொழி ஆங்கில ஜேர்மன் மொழிக் குடும்பத்தைச் சேர்ந்ததும் நெதர்லாந்து, வட பெல்ஜியம் தென்னாப்பிரிக்க நாடுகளில் பரவலாகப் பேசப்படுபவை. கந்தொர், கேத்தல், போஞ்சி போன்ற சொற்கள் டச்சுச் சொற்களே. எண்பதுகளின் ஆரம்பத்தில் ஜேர்மன் - நெதர்லாந்து எல்லைக்காவல் படையினரின் மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றிய அனுபவத்தின் வெளிப்பாடாக இந்நூல் மலர்ந்தது.

சரவணபவனின் நான்காவது அகராதி நூல் ஜேர்மன் - தமிழ் அகராதி என்ற தலைப்பில் 1008 பக்கங்களில் 2000ம் ஆண்டில் வெளிவந்துள்ளது. முன்னைய மூன்று நூல்களையும் விட இருமடங்கு பக்கங்களுடன், கலைஞர் மு.கருணாநிதியின் அணிந்துரையுடன் இது வெளியாகியுள்ளது. இவ்வகராதி பற்றி கலைஞர் தனது அணிந்துரையில் "அண்ணல் விபுலானந்த அடிகளார் வழியில் தமிழ்ச் சமுதாய வளர்ச்சிக்கும் தமிழ்மொழி வளர்ச்சிக்கும் இலங்கை நாட்டு யாழ்ப்பாணத் தமிழர்கள் ஆற்றியுள்ள, ஆற்றிவரும் தொண்டுகள் ஆக்கபூர்வமானவை. காலத்தால் அழியாதவை. அருமைச் சகோதரர் திரு கனகசபாபதி சரவணபவன் அவர்களின் இந்த ஜேர்மன் தமிழ் அகராதியும் அத்தகைய சிறப்பிற்குரியதாகும்." என்று எழுதியிருந்தார்.


பன்மொழி அகராதிகள் முழுமையானவையாக உலகில் என்றுமே இருந்ததில்லை. மொழிப் பயன்பாடு வளரும்போதெல்லாம் அகராதியும் வளரும். சரவணபவனின் முதலாவது அகராதிக்கும் 2000ம் ஆண்டில் 1008 பக்கங்களில் வெளியிடப்பெற்ற நான்காவது அகராதிக்கும் இடையே இந்த வளர்ச்சியை துல்லியமாகக் கண்டுகொள்ளலாம். மேலும் இவர் வரலாற்றுத் திருக்கோணமலை என்ற நூலையும் பங்குச்சந்தை வெற்றிவாய்ப்புக்கள் என்ற அறிவியல் நூலையும் எழுதியிருக்கிறார்.

# ஆலயங்கள் கலை இலக்கிய வளர்ச்சிக்கு உதவ வேண்டும்

லண்டனில் உள்ள ஈழத் தமிழர்களின் ஆலயங்கள் பணம் சேகரிப்பதிலும் பதவிக்கும் மட்டும் குறியாக இராமல் பொதுத் துறைகளிலும் ஈடுபட வேண்டும் என கற்பக விநாயகர் ஆலயத் தலைவர் கோபால் தெரிவிக்கிறார். யூலை நடுப்பகுதியில் இடம்பெற்ற சைவ மாநாடு தொடர்பாக கருத்து வெளியிட்ட அவர் சில ஆலய நிர்வாகங்களுக்கிடையேயான போட்டி பொறாமைகள் அவர்களை இழிவான செயலை செய்யத் தூண்டுவதாக அவர் கவலை தெரிவித்தார்.

ஆலயங்கள் தாயகத்திற்கு உதவும் அதேசமயம் இங்குள்ள இளைஞர் யுவதிகளது எதிர் கால நலனையும் கருத்தில் எடுக்க வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார். மேலும் கூறுகையில் கலை, இலக்கிய வளர்ச்சிக்கு உதவுவது ஊக்குவிப்பது வரவேற்கத்தக்கது என்றார்.

# ஐ.சாந்தனின் இலக்கியப்பணிகள்



என். செல்வராஜா
நூலகவியலாளர்

யாழ்ப்பாணத்திலுள்ள சுதுமலைக் கிராமத்தில் 1947ம் ஆண்டு பிறந்த ஐயாத்துரை சாந்தன் அவர்கள் மானிப்பாய் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, ஆகிய கல்லூரிகளில் தன் அடிப்படைக் கல்வியை முடித்துக்கொண்டு கட்டுபெத்தை தொழில்நுட்பக் கல்லூரியில் படவரைகலைஞர் துறையில் பயிற்சிபெற்றவர். தொழில்துறையில் படவரை கலைஞராகக் கொழும்பில் பணியாற்றிய இவர் அறுபதுகளின் இறுதிப் பகுதிகளில் ஈழத்தின் படைப்பிலக்கியத்துறையில் கால்பதித்தவர். 1966 இல் கலைச்செல்வியில் தனது முதலாவது சிறுகதையை எழுதியதன் மூலம் இலக்கிய உலகில் பிரவேசித்த இவர் இன்றுவரை யாழ்ப்பாண மண்ணில் சிறந்ததொரு படைப்பாளியாக வாழ்ந்து வருகின்றார்.

ஐயாத்துரை சாந்தனின் முதலாவது நூல் பார்வை என்ற பெயரில் தெல்லிப்பழையிலிருந்து மாவிட்டபுரம் யாழ் இலக்கிய நண்பர் கழக வெளியீடாக சித்திரை 1970இல் வெளிவந்தது. மனிதருடைய உள்ளத்து நெகிழ்ச்சிகளை, கிளர்ச்சிகளை வைத்து எழுதுவதை தன் பலமாகக் கொண்டிருந்த ஐ.சாந்தனின் முதலாவது சிறுகதைத் தொகுதி இதுவாகும். ஒக்டோபர் 1975இல் ஒரே ஒரு ஊரிலே என்ற பெயரில் சாந்தன் அவர்களின் இரண்டாவது சிறுகதை நூல் சுதமலையிலிருந்து வெளிவந்திருந்தது. பொருளாதாரம், சமூகம், அரசியல், இலக்கியம், பாலுறவு, இனங்கள், தேசிய ஒருமைப்பாடு போன்றவை இக்கதைகளின் கருப்பொருள்களாகியுள்ளன. தேசிய ஒருமைப்பாட்டிற்கும் இன உணர்வுகளுக்குமுள்ள வேற்றுமைகளும், அவற்றின் தோற்றக் காரணிகளும் சிறப்பாக இக்கதைகளில் காட்டப்படுகின்றன. ஒரே ஒரு ஊரிலே என்ற நூல் சாந்தனுக்கு 1975ம் ஆண்டுக்குரிய சாகித்திய மண்டலப் பரிசினைப் பெற்றுக் கொடுத்தது.

சாந்தன் அவர்கள் 1975இல் கடுகு என்ற குறுங்கதைத் தொகுதி ஒன்றினை வெளியிட்டிருந்தார். 31 பக்கம் கொண்ட இச்சிறுநூல் உருவத்தில் மாத்திரமல்லாது உள்ளடக்கத்திலும் கடுகுபோலச் சிறியதாகவே இருந்தது. மிக நுணுக்கமாக இசைக்கப்பட்டுள்ள இக்கடுகுக் கதைகள் தரும் கனதியான சமுதாயப் பார்வையின் கோலங்களை ஜீரணித்துச் சுவைப்பதற்கு நீண்டநேரம் ஆகலாம். உதாரணத்துக்கு ஒன்று:

"மதில்கரையோட நிக்கிற பப்பாசி மரத்திலை, ஒரு பழமும் மிஞ்சுதில்லை"

"ஏன்?"

"ரோட்டுக்கு அந்தப்பக்கமிருக்கிற பட்டினிப் பட்டாளங்களெல்லாம், ஆக்களில்லாத நேரம் பார்த்து மதிலிலை ஏறி, எல்லாத்தையும் பிடுங்கிக்கொண்டு போகுதுகள்."

"அந்த மரத்தை வெட்டி விடுங்கோ. தொல்லை இல்லை"

டிசம்பர் 1978 இல் ஓட்டுமா என்ற நூலை சாந்தன் எழுதியிருந்தார். சாந்தனின் முதலாவது நாவலான ஒட்டுமா இடம்பெற்றுள்ளது. இலங்கையின் இரு இனங்களையும் ஒட்டவைக்கும் படைப்பிலக்கிய முயற்சியாக ஒட்டுமா வின் கதைக்களம் அமைந்திருந்தது. இது வெறும் காதல் கதையாக மட்டுமன்றி இரு இனங்களின் கதையாக - சமூக வரலாறாக அமைந்திருந்தது.

தமிழகத்தில் இவரது முளைகள், கிருஷ்ணன் தூது, ஒரு பிடி மண், யாழ் இனிது ஆகிய நூல்கள் அசோக மித்திரன், நீல பத்மநாதன் போன்ற தமிழகத்து புகழ்பூத்த இலக்கியவாதிகளால் விதந்து போற்றப்பட்டுள்ளன.

சாந்தன் எண்பதுகளில் சோவியத் யூனியனுக்குச் சென்று வந்திருந்த தனது அனுபவங்களை வைத்து 1985இல் ஒளி சிறந்த நாட்டிலே என்ற பெயரில் பயணக்கட்டுரை ஒன்றினையும் நூலுருவில் வெளியிட்டிருந்தார். ஒக்டோபர் 1988இல் இவரது மற்றுமொரு சிறுகதைத் தொகுப்பு இன்னொரு வெண்ணிரவு வெளிவந்தது. இதன்பின் ஜனவரி 1994இலும் வெண்புறா வெளியீடாக காலங்கள் என்ற பெயரில் மற்றொரு சிறுகதைத் தொகுப்பு வெளிவந்தது.

ஈழத்து இனப்பிரச்சினை இலக்கியம் தொடர்பாக நோக்கும்போது கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக ஈழத்துத் தமிழிலக்கியத்தில் தீவிரமாகச் செயற்பட்டு வரும் ஐயாத்துரை சாந்தன் குறிப்பிடத்தகுந்தவராக உள்ளார். இனப்பிரச்சினையை உணர்ச்சி சார்ந்த ஒரு விடயமாக அணுகாமல் அறிவுபூர்வமாகச் சிந்தித்து உணர்வுபூர்வமாக வெளியிட முற்படும் இவரது போக்கு இவரது சிறுகதைகளில் துலங்குகின்றன. வாழ்வியல் அனுபவங்களுக்குள் கலந்து நின்று உண்மையையும் முழுமையையும் தேடும் ஒரு மனிதநேயவாதியையும் கொள்கைப்பிரகடனம் செய்யாமலே தனிமனித, சமூகப் பிரச்சினைகளை நுட்பமாக நுணுகி நோக்கி விமர்சிக்கும் அவரது பாணியையும் எழுதப்பட்ட அத்தியாயங்கள் என்ற தொகுப்பிலுள்ள கதைகளில் அவதானிக்கமுடிகின்றது.

தமிழுக்கு வெளியே சென்று ஆங்கிலத்திலும் தனது திறமையை, தேர்ச்சியைக் காட்டவேண்டும் என்பதில் சாந்தனுக்கு ஈடுபாடு அதிகமாகவே இருந்துள்ளது. இவரது கதைகள் சில இந்தியத் தமிழர் ஒருவரால் மொழிபெயர்க்கப்பட்டு The Illustrated Weekly of India பத்திரிகையில் வெளிவந்திருந்த நிலையில், இவரது முதலாவது ஆங்கில நூலாக பொறிகள் (Sparks) என்ற தலைப்பிலான சிறுகதைத் தொகுப்பு நூலை சாந்தன் டிசம்பர் 1990இல் வெளியிட்டார். சாந்தனின் கதைகள் உலகப் புகழ்பெற்ற வெளியீட்டகமான பென்குவின் (இந்தியா) நிறுவனத்தின் ஈழத்துச் சிறுகதைத் தொகுப்பு நூலிலும் இடம்பெற்றுள்ளது அவருக்குக் கிடைத்துள்ள அங்கீகாரம் என்று கருதுகின்றேன்.

In their own worlds என்ற பெயரில் மற்றொரு ஆங்கிலச் சிறுகதைத் தொகுப்பினை இலங்கையின் பிரபல்யமான வெளியீட்டகமாகக் கருதப்படும் கொடகே (Godage) நிறுவனத்தின் வாயிலாக 2000ம் ஆண்டில் வெளியிட்டிருந்தார். ஈழத்தின் போராட்டக் களத்தை அங்கு நிகழும் போரியல் சார் சமூக வாழ்வினை, அந்த சுமூகநிலையற்ற வாழ்வினை தமது இயல்புவாழ்க்கையாக ஏற்றுக்கொண்ட மக்களின் அவலங்களை, உணர்வுகளை சித்தரிப்பதாக அமைந்த சாந்தனின் கதைகள் In their own worlds என்ற ஆங்கில நூலின் வாயிலாக, தமிழரல்லாத பல்லினச் சமூகங்களுக்கு இலங்கையரின் மற்றொரு வாழ்வியல் கோலத்தை துணிச்சலுடன் நேர்மையுடன் புரியவைத்தது. இந்நூலும் சிறந்த ஆங்கில சிறுகதைத் தொகுப்பிற்கான சாகித்திய



மண்டலப் பரிசினை 2000ம் ஆண்டில் சாந்தனுக்குப் பெற்றுக் கொடுத்தது. இலங்கைத் தமிழர் ஒருவர் ஆங்கில மூல இலக்கிய நூலொன்றுக்கான சாகித்திய மண்டலப் பரிசினைப் பெற்றுக்கொண்டது இதுவே முதல் தடவை என்று கருதுகின்றேன்.

Survival and Simple Things என்ற மற்றொரு ஆங்கில கவிதை நூல் ஜனவரி 2003இல் சாந்தனால் எழுதப்பட்டது. இதுவே இவரது அண்மைக்கால ஆங்கில நூலாக உள்ளது. ஐயாத்துரை சாந்தனின் அண்மைக்கால தமிழ் நூலாக இருபதாம் நூற்றாண்டு உலக இலக்கியம்: படைப்பு, படைப்பாளர்கள் பற்றிய குறிப்புகள். என்ற அரியதொரு நூல் வெளிவந்துள்ளது. கொழும்பு மூன்றாவது மனிதன் வெளியீட்டகம் இந்நூலை அச்சிட்டு வெளியிட்டுள்ளது. இருபதாம் நூற்றாண்டின் இலக்கியத் துறையில் சாதனையாளர்களாக இன்று கருதப்படும் படைப்பாளிகளைப் பற்றிய விபரங்களைத் தேர்ந்து, அவர்களது புகைப்படங்களுடன் தந்துள்ளார். படைப்பாளிகளின் வாழ்க்கைப் பின்னணி, அவர்களின் இலக்கிய ஆற்றல், சிந்தனைப் போக்க என்பவற்றையும் அவர்கள் தாம் சார்ந்த சமூகத்தின்மேல் கொண்ட பார்வை, தூரநோக்கு என்பவற்றையும் பல்வேறு உதாரணங்கள் சகிதம் சாதாரண வாசகர்கள் முன் நிலைநிறுத்தமுயன்றுள்ளார்.

# அரசியல் தஞ்சம் தற்போதைய நிலவரம் பாராளுமன்றத்தில் பொதுக்கூட்டம்

இலங்கையில் நிலைமகைள் மோசமடைந்து வரும் நிலையில் அரசியல் தஞ்சத்தின் நிலை பற்றி ஆராயும் பொதுக் கூட்டம் ஹவுஸ் ஒப் கொமனில் ஏற்பாட செய்யப்பபட்டது. இக்கூட்டத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர் ஜோன் மக்டோனால்ட் தலைமை தாங்க உள்ளார். யூலை 17ல் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கூட்டத்தில் Dr Chris Smith - Royal Institute of International Affairs, Dr Alan Keenan - University of Pennsylvania, Ms Laura Dubinsky - Barrister ஆகியோர் உரையாற்ற உள்ளனர்.

இது பற்றி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுத்த டொக்டர் நிக்கலஸ்பிள்ளை, இலங்கையின் பாதுகாப்பு நிலவரங்கள் மோசமாக பாதிப்படைந்துள்ளதாகவும். புதிதாக உருவாகி உள்ள நிலவரம் இடப்பெயர்வுகளையும் காயப்பட்டவர்களையும் மரணத்தையும் ஏற்படுத்தும் என்றும் சுட்டிக்காட்டி உள்ளார். அவர் தன் அழைப்பில் இலங்கை இராணுவத்தால் மட்டுமல்லாமல் அரசு இல்லாத காரணிகளும் மனித உரிமைகளில் ஈடுபடுவதாகவும் அவர்களும் அதற்கான பொறுப்புகளை ஏற்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

மதிப்பிற்குரிய மகாராணியின் அரசாங்கம் இலங்கையில் பாதுகாப்பு நிலைமைகள் மோச மடைவதாகக் கூறிக்கொண்டாலும் உண்மையிலேயே பாதிக்கப்படக் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையான தஞ்சம் கோரிய இலங்கையர்கள் திருப்பி அனுப்பப்படுவதை டொக்டர் நிக்கலஸ்பிள்ளை சுட்டிக்காட்டி உள்ளார்.

இலங்கையில் நடைபெறும் மனித உரிமை மீறல்களை கட்டுப்படுத்தவும் அங்குள்ள முரண்பாட்டை முடிவுக்கு கொண்டுவரவும் பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்கள் அந்நாட்டின் மீது ஒரு பார்வையைக் கொண்டிருக்க வேண்டும் என டொக்டர் நிக்கலஸ்பிள்ளை தன் அழைப்பில் தெரிவித்துள்ளார்.

# சட்ட விரோத குடிவரவாளர்களுக்கு பொது மன்னிப்பு சர்ச்சை தொடர்கிறது

சட்டவிரோதமாக பிரித்தானியாவில் உள்ள குடிவரவாளர்களை எவ்வாறு கையாள்வது என்பதில்



தொடர்ந்தும் சர்ச்சை நிலவுகிறது. குடிவரவு அமைச்சர் Liam Byrne பொது மன்னிப்பு வழங்குவது ஒரு தீர்வு அல்ல என்றும் ஏற்கனவே உள்ள விதி முறைகளை "fair but tough" நடைமுறைப்படுத்தப் போவதாகவும் யூலை 12ல் தெரிவித்து உள்ளார்.

பொது மன்னிப்பிற்காக குரல் எழுப்புவோர் இதனை நடைமுறைச் சாத்தியமற்றது எனத் தெரிவித்துள்ளனர். குறைந்தது இரண்டு ஆண்டுகள் பிரித்தானியாவில் சட்டவிரோதமாக இருந்தவர்களும் இந்நாட்டில் தங்க அனுமதிக்கப்பட வேண்டும் என Joint Council for the Welfare of Immigrants (JCWI) தெரிவிக்கின்றனர். மேலும் கிரிமினல் குற்றங்களில் ஈடுபடாமல் ஏழு ஆண்டுகள் இருந்தவர்கள் நிரந்தரமாக இங்கு தங்க அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் Joint Council for the Welfare of Immigrants (JCWI) தெரிவித்துள்ளது.

சிவில் உரிமைவாதிகளும் அமைச்சரின் கருத்தை நிராகரித்து உள்ளனர்.

# சுரண்டப்படும் குடிவரவாளர்கள்

பிரித்தானியாவில் வேலை செய்யும் மிக அதிகமான குடிவரவாளர்கள் பிழையான தொழில் வழங்குனர்களால் சுரண்டப்படுவதாக முன்னணித் தொழிசங்கவாதியான ஜக் றொமி தெரிவித்துள்ளார். அரச கணிப்பின் படி பிரித்தானியாவில் 570,000 சட்டவிரோத குடிவரவாளர்கள் உள்ளனர். இவர்கள் சுரண்டும் தொழில் வழங்குனர்களால் குறைந்த சம்பளத்தில் கூலிகளாக்கப்பட்டுள்ளனர் என்கிறார் ஜக் றொமி.

MARKANDAN & CO SOLICITORS

அரசியல் தஞ்ச விடயங்கள், பிரித்தானிய பிரஜாவுரிமை
விவாக விண்ணப்பங்கள், வீதிப் போக்குவரத்து வழக்குகள்,
Bankruptcy Problems,
Cafe அனுமதிகள் யாவும் ஒரே கூரையின் கீழ்.

Last will & Probate, House flat sale, Re-mortgages,
Highly skilled migration, Sponsorship,
Power of Attorney, Work permet application, Civil Litigation.

020 8514 8188
845 Romford Rd, Manor Park, London E12

MARKANDAN & UDDIN SOLICITORS
SOLICITORS AND ADMINISTRATORS FOR OATHS
M. MARKANDAN LLB A. UDDIN LLB (Hons) MA.LLM PhD-RFL



* Last Will
* Power of Attorney
* Sponsorship Declarations

Contact:

| | |
|---|---|
| M MARKANDAN | 07956 386 576 |
| UDDIN | 07957 455 670 |
| KURUP | 07748 764 079 |
| GILBERT | 07946 318 470 |
| MAHENDRAN | 07881 650 472 |
| MATHU | 07830 285 634 |
| JASOKUMAR | 07961 996 482 |
| SONG | 07952 769 656 |
| SHIYAM | 07793 134 335 |

Markandan & Uddin Solicitors
Tamil House, 720 Romford Road, London, E12 6BT
Tel: 020 8514 8300 / 07830285 634
Fax: 020 8514 8381

AMEN SOLICITORS
SOLICITOR AND COMMISSIONERS FOR OATHS
(formerly known as Nathan & Linga)

We offer a specialised and friendly service in the following areas of law
* Immigration and Nationality
* Human Rights
* Judicial Review
* Civil Litigation
* Criminal Litigation
* Injunction
* Traffic Offences
* Conveyancing (Residential & Commercial)
* Family Law
* Employment Law
* Mental Health
* Liquor licensing
* Landlord and Tanent

Also, we offer our quality legal service inthe following languages
* Creole * Chinese
* English * French
* Italian * Hindi
* Malay * Mandarin
* Nepalese * Funjabi
* Sinhalese * Spanish
* Tamil * Urdu

4 Amen Corner, Tooting,
London SW17 9JE
General Line: 0208 682 7720
Emergency Line: 0777 164 6441
Fax: 0208 767 1412

LINGA & CO
LEGAL ADVISERS AND COMMISSIONERS FOR OATHS
T. 020 8544 9285 F. 020 8452 9530

→ உங்களுக்கு பிரித்தானியாவில் வசிக்கும் அல்லது வேலைபார்க்கும் உரிமை மறுக்கப்பட்டுள்ளதா?
→ திருப்பி அனுப்பும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளதா?
→ நீங்கள் பிரித்தானியாவில் தொடர்ந்து சட்டப்படி வசிக்க விரும்புகிறீர்களா?
→ அப்படியாயின் பல வழிகள் உண்டு
உடன் எம்மைத் தொடர்பு கொள்ளுங்கள்.
12 ஆண்டுகால அனுபவமுள்ள முன்னணி குடிவரவுச் சட்ட நிறுவனத்திடம் இருந்து நிறுவனத்திடம் இருந்து உங்கள் குடிவரவுப் பிரச்சினைக்குத் தீர்வு காணுங்கள். இதில் நாம் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்கள். மேலும் சமர்ப்பிக்கப்பட்ட பெரும் பாலான நமது விண்ணப்பங்கள் - மேன் முறையீடுகள் உள்துறை அமைச்சினால் அங்கிகரிக்கப்பட்டுள்ளன.

We specialise in
Asylum and Immigration matters, Human Rights Application, Appeals, Detentionand Bail, Entry clearance application and appeal, Immigration, Judicial Review, Work Permits, EEA Application (Sponsor relative), Student visa, Highly Skilled Migration Program, Naturalisation Application,

46 High Street, Collieswood, London SW19, Emergency Line: 077 7164 6441

NP solicitors
- Immigration matters
- Work permits, HSMP, SBS
- All entry clearance issues
- Appeals, ECO to High Court etc
- All Home Office applications
- 10 Asian languages spoken
Commissioners For Oaths
171 Hanworth Road, Hounslow,
Middlesex TW3 3TT - UK
Tel: 020 8577 7799 Fax: 020 8577 9788
e-mail: npsolicitors@yahoo.co.uk
www.npsolicitors.com
Saturdays by Appointment
THIS FIRM IS REGULATED BY THE LAW SOCIETY

RASIAH & CO.
Solicitors
* Conveyancing (Residential & Commercial)
* Immigration
* Matrimonial
* Landlord & Tenants
* Police Station Representation
* Legal Aid work undertaken
020 8543 4040
020 8543 2400
180A Merton High Street, London SW19 1AY

MORTGAGE PLUS
LONDON LTD
Mortgages Tailor-Made for you
Specialist in CCJ / Default Cases
020 8571 2570
077 1015 0713
81, South Rd, Southall, Middx, UB1 1SQ

SRIHARANS SOLICITORS
AUTHORISED TO ADMINISTER OATH
Professional service for freedom and justice under the Human Rights Act of UK and with European Convention of Human Rights
(P) 020 8843 9977
020 8843 9974 (3 lines)
223 The Broadway
Southall, Middx.

JANI TAYLOR ASSOCIATES
- Expert Witness
- Forensic Accounting
- Litigation Support
- Tax Investigations
Office 6A, Popin Business Centre
Southway, Wembley, Middlesex HA9 0HF
T: 020 8795 3429 F: 020 8795 3318
rajni@janitaylor.co.uk

LOCAL COMMUNITY HOUSING FINANCIAL SERVICES
Are you having problems getting a mortgage
(Mortgage Declined? We can help)



No Income Proof
CCJs * Defaults Up To 95%
Loan / Mortgage Arrears
100% Mortgage Available
Self Certificate Available (up to 90%) LTV
Self Employed or Employed
Discharged Bankrupts
Council RTB 100% (inc. adverse)
Buy to Let or Let to Buy
Buy to Let Foreign Nationals
Commercial Mortgage Arranged
Secure Loans
Principle Offer Within 24hrs (subject to status)
All Type Of Property Insurance Available
FOR AN IMMEDIATE DECISION CALL THE MORTGAGE SPECIALIST ON
Tel: 020 8980 2121
Mob: 07956 914 735
Fax: 020 8980 8966
email: thiruprabaharan@hotmail.com
Consultation ask for Mr.Prabaharan
153/159 Bow Road, London E3 2SE
Your home is at risk if you do not keep up payment on a mortgage or other loan secured on it

David Shine & Kharhanda Solicitors
Divorce, Litigation,
Wills Probate,
CONVEYANCING
MATRIMONIAL & FAMILY
Also Landlord & Tenant Cases
See us Now
020 8571 6001 / 2
Southall

Khosla & Co.
Chartered Certified Accountants
For your Accounting and Taxation needs
Call
Tel: 020 8548 8899
Fax: 020 8548 8846
412 Katherine Road
London E7 8NP

# உலக வர்த்தகப் பேச்சுவார்த்தை தோல்வி இந்தியா வெளியேறியது




ஜெனிவாவில் உலக வர்த்தக அமைப்பு சார்பில் 60 நாடுகளின் வர்த்தக மந்திரிகளிடையே பேச்சுவார்த்தை நடைபெற்றது. வேளாண் விளை பொருட்களுக்கான மானியம் விலை ஆகியவற்றை பணக்கார நாடுகள் குறைக்க வேண்டும், வளரும் நாடுகள் தங்களது உற்பத்தி சந்தைகளை திறந்துவிட வேண்டும் என்பன பற்றி பேச்சுவார்த்தை நடைபெற்றது. ஆனால் இதில் ஒருமித்த கருத்து உருவாகவில்லை, பேச்சுவார்த்தை தோல்வியடைந்தது. இதையடுத்து இந்தியா சார்பில் பங்கேற்ற மத்திய வர்த்தக மந்திரி கமல்நாத் கூட்டத்தில் இருந்து வெளியேறினார். அவர் நாடு திரும்ப உள்ளார்.

பணக்கார நாடுகள் பிடிவாதமாக இருப்பதால் இனிமேலும் பேச்சுவார்த்தை நடத்துவதில் அர்த்தம் இல்லை என்று அவர் கூறினார். உலக வர்த்தக கழக தலைவர் பாஸ்கர் லேமி கூறுகையில் உலக வர்த்தக கழக உறுப்பு நாடுகளின் ஜெனிவா பேச்சு தோல்வியடைந்துவிட்டது என வெளிப்படையாக அறிவித்துள்ளார். அமெரிக்காவை முதன்மையான ஸ்பொன்சராக (நிதியாதாரமாக) கொண்ட 149 நாடுகளின் வர்த்தக கூட்டமைப்பு உலக வர்த்தக கழக உறுப்பு நாடுகளிடையே விவசாய மற்றும் தொழில்துறைப் பொருட்களின் வர்த்தகத்திற்கு தடையாக உள்ள அம்சங்களைக் களைவதற்காக தொடங்கிய 7 நாள் ஜெனிவா பேச்சுவார்த்தை தொடக்கத்திலேயே முறிந்தது. இதற்கு விவசாய மானியங்களைக் குறைப்பது தொடர்பான விவகாரத்தில் அமெரிக்கா காட்டிய பிடிவாதமே முக்கிய முழுமையான காரணம். இதனால் இந்த பேச்சுக்களில் தனிமைப்பட்டுப் போன அமெரிக்காவுக்கு ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் வளரும் நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

ஜெனிவா பேச்சு தோல்வியில் முடிந்ததால் தற்போது நாங்கள் நெருக்கடியில் உள்ளோம் என உலக வர்த்தக தலைவர் பாஸ்கர் லேமி பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளார். விவசாயிகளுக்கு பல்வேறு வகையில் மானியம் வழங்கும் அமெரிக்கா பிற நாடுகளில் மானியத்தை




வெட்டுமாறு கூறுகிறது. அது மட்டுமின்றி அமெரிக்கா நிர்ணயித்துள்ள தரமுறைகளை பின் பற்றினால் இந்தியா போன்ற நாடுகள் விவசாய பொருட்களை ஏற்றுமதி செய்ய முடியாது என்பது கவனிக்கத்தக்கது.

## வடகொரியா ஏவுகணை சோதனை ஐ.நா அவசர ஆலோசனை



அணு ஆயுதங்களை எடுத்துச் செல்லும் அதிநவீன ஏவுகணைகளை வட கொரியா சோதனை செய்தது. இந்த பிரச்சனை தொடர்பாக ஐ.நா பாதுகாப்பு கவுன்சில் அவரச ஆலோசனை நடத்துகிறது. யூலை முதல் வாரத்தில் அணுஆயுதங்கள் பயன்படுத்தக் கூடிய 6 புதிய வகை ஏவுகணைகளை சோதனை நடத்தியது. இதில் டெபொடாங்-2 என்ற ஏவுகணை அமெரிக்கா வரை தாக்கக்கூடிய அளவு சக்தி வாய்ந்தது என்று தகவல்கள் கூறுகின்றன. கொரியா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு இடையே உள்ள கடல் பகுதியில் இந்த ஏவுகணைகள் விழுந்தன. வடகொரியா ஏற்கனவே அணுஆயுத சோதனைகளை நடத்தியது.


தனது எல்லைப்பகுதியில் இந்த ஏவுகணை சோதனை நடத்தப்பட்டால் அது ஜப்பானை தாக்குவதாகவே எடுக்கப்படும் என ஜப்பான் கூறிவந்தது. வடகொரிய ஏவுகணை சோதனையை நிறுத்த அமெரிக்காவும் எச்சரிக்கை விடுத்துப் பார்த்தது. வடகொரிய ஏவுகணை சோதனை நடந்து முடிந்த நிலையில் பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தை கூட்ட ஜப்பான் ஏற்பாடு செய்துள்ளது. இத்தகவலை ஐ.நாவுக்கான பிரெஞ்சு தூதர் ஜூன் மார்க் தெரிவித்துள்ளார்.

## இந்துமா கடலில் சுனாமி எச்சரிக்கை மையங்கள்



இந்துமா கடலை ஒட்டியுள்ள நாடுகளுக்காக நிறுவப்பட்டுள்ள சுனாமி எச்சரிக்கை கருவிகள், மையங்கள் செயற்பாட்டுக்கு வந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி அறிவியல் கலாச்சாரப் பிரிவின் டைரக்டர் ஜெனரல் கொசிரோ மட்ஷீரா தெரிவித்துள்ளார். இந்துமா கடலை சுற்றியுள்ள நாடுகளுக்கு 26 சுனாமி எச்சரிக்கை தகவல் மையங்கள் அமைக்கப்பட்டு அவை செயல்பாட்டுக்கு வந்துள்ளன என்று பாரிசில் மட்ஷீரா தெரித்தார்.

## நேபாள பிரதமர் தலைமையில் இரு இராணுவங்கள் மாவோயிஸ்டு தலைவர் யோசனை



நேபாள இராணுவத்தையும் கிளர்ச்சியாளர்களின் மக்கள் விடுதலை படையையும் பிரதமர் ஜி.பி கொய்ராலாவின் தலைமையின் கீழ் இயங்கச் செய்யும் உத்தேச திட்டத்தை மாவோயிட்ஸ் தலைவர் பி பிரசண்ட வெளியிட்டுள்ளார். நேபாளத்தில் இரு இராணுவங்கள் செயல்படுவதே பிரச்சனையைத் தீர்ப்பதற்கு ஒரே வழி என்று அவர் தெரிவித்தார். இடைக்கால அரசு அமையும் போது இத்திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார். காத்மாண்டில் நேபாள பத்திரிகையாளர்கள் கூட்டமைப்பின் நிர்வாகிகள் கூட்டத்தில் இந்த யோசனையை பிரசண்ட தெரிவித்தார்.

இரண்டு இராணுவ அமைப்புக்களையும் கண்காணிப்பதற்காக நேபாள இராணுவத் தளபதிகள் மாவோயிட்ஸ் கமாண்டர்கள் அடங்கிய கூட்டு கமிட்டியை அமைக்க வேண்டும். அதே வேளையில் இரண்டு படையினரும் தங்கி செயல்படும் இடங்கள் தனித்தனியாக இருக்க வேண்டும். நாளடைவில் தேசிய இராணுவப் படையை அமைப்பதற்கு இது வழிவகுக்கும் என்று பிரசண்ட கூறியுள்ளார்.

முன்னதாக நேபாளத்தில் 7 கட்சி கூட்டணி ஓர் அறிக்கை வெளியிட்டிருந்தது. இதில் மாவோயிட்ஸ்கள் ஆயுதங்களை ஐ.நா கண்காணிப்பின் கீழ் கொண்டு வராத பட்சத்தில் மாவோயிட்ஸ்களை உள்ளடக்கிய இடைக்கால அரசை அமைக்க இயலாது என்று கூறியிருந்தது. அதற்கு பதில் தரும் விதத்தில் பிரசண்ட கூறியுள்ளார்.

## முதற் தடவை குவைத் பெண்கள் வாக்களிப்பு



குவைத் பெண்கள் முதன்முறையாக தேர்தலில் பங்கேற்று வாக்களித்தனர். ஜூன் 29ல் நடைபெற்ற 50 உறுப்பினர்களைக் கொண்ட குவைத் நாடாளுமன்ற தேர்தலுக்கு வாக்கு பதிவு நடந்தது. முதன் முறையாக பெண்களும் வாக்களிப்பில் கலந்து கொண்டனர். நாடாளுமன்ற உறுப்பினர்கள் முழுவதும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் ஒரே வளைகுடா நாடு குவைத். 25 தொகுதிகள் உள்ள குவைத்தில் ஒவ்வொரு தொகுதியிலும் 2 உறுப்பினர்கள் என 50 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

இதுவரை தேர்தலில் போட்டியிடவோ வாக்களிக்கவோ பெண்களுக்கு அனுமதி இல்லாமல் இருந்தது. ஆனால் இந்த ஆண்டு தேர்தலில் போட்டியிடவும் வாக்களிக்கவும் முதல் முறையாக பெண்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கும் இந்த முடிவுக்கு பழமைவாதிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இருப்பினும் இம்முடிவு அமுல்படுத்தப்பட்டுள்ளது. பழமைவாத நாடான குவைத்தில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றமாகவே இது கருதப்படுகின்றது. அடுத்த நாடாளுமன்ற அமர்வில் பெண் எம்பிக்களும் இடம்பெறுவார்கள் என பெண் வேட்பாளரான ஜெனான் போஷெஹ்ரி தெரிவித்துள்ளார். இத்தேர்தலில் போட்டியிட்ட 28 பெண்களில் ஒருவர் கூட வெற்றிபெறவில்லை.

## மும்பாய் குண்டுவெடிப்பு பாக். இந்திய உறவு பாதிப்பு

யூலை 11ல் இந்தியாவின் வர்த்தகத் தலைநகர் மும்பையில் இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்பைத் தொடர்ந்து இந்திய - பாகிஸ்தான் உறவு மீண்டும் பாதிக்கப்பட்டு உள்ளது. பாகிஸ்தான் பயங்கரவாதிகளை ஒடுக்காவிட்டால் இரு நாடுகளுக்கும் இடையேயான சமாதான உறவுகள் பாதிக்கப்படும் என இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் யூலை 14ல் தெரிவித்துள்ளார்.

இக்குண்டு வெடிப்புகளில் 180 பேருக்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டும் 700 பேருக்கு மேற்பட்டவர்கள் காயமடைந்தும் உள்ளனர். மும்பாய் ரெயில் போக்குவரத்து உலகில் மிகவும் நெரிசலானது என்பது குறிப்பிடத்தக்கது. இது நகரத்தின் உயிர்நாடியாகவும் இருந்து வருகிது.

## யூரேனியம் செறிவூட்டல் விவகாரம் ஜி8 நாடுகளின் அழைப்பை நிராகரித்தது ஈரான்

நியூயோர்க்கில் ஜூலை 1ல் நடைபெற்ற ஜி-8 நாடுகள் சந்திப்பில், யூரேனியம் செறிவூட்டலை ஈரான் நிறுத்திக் கொண்டால் தங்களிடம் உள்ள தொழில்நுட்பங்கள் மற்றும் வர்த்தக சலுகைகளை ஈரானுக்கு வழங்குவதாக விடுத்த வேண்டுகோளை ஈரான் நிராகரித்துள்ளது. உலகின் பணக்கார நாடுகளின் அமைப்பான ஜி-8 நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்களின் கூட்டம் யூலை மத்தியில் மொஸ்கோவில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் ஈரான் விவகாரம் குறித்து விவாதிக்கப்பட உள்ளது. இதனால் ஜூலைக்குள் ஈரான் தனது நிலையை தெரிவிக்க வேண்டுமென அந்நாடுகள் கேட்டுக்கொண்டுள்ளன.

இந்நிலையில் நியூயோர்க்கில் ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் மானோச்சர் மோடாகி செய்தியாளர்களிடம் கூறுகையில் யூரேனியம் செறிவூட்டலை அணுமின் தயாரிக்க பயன்படுத்த உள்ளோமே தவிர ஜி-8 நாடுகள் நினைப்பது போல் அணு ஆயுதங்கள் தயாரிக்க அல்ல என்று தெரிவித்தார். ஜி-8 நாடுகள் அறிவித்துள்ள தொழில்நுட்ப உதவிகள் பற்றி ஓகஸ்ற் மாதத்திற்கு பின்னரே முடிவுசெய்ய முடியும் என்று தெரிவித்த வெளியுறவுத்துறை அமைச்சர் ஈரான் பல்வேறு கமிட்டிகளின் ஆலோசனைக்குப் பிறகு ஓகஸ்ற்றில் அது பற்றி முடிவெடுக்கும் என்று தெரிவித்தார்.

## இஸ்ரேல் - லெபனான் யுத்தம்

இஸ்ரேல் இராணுவ வீரர்கள் இருவரை ஹிஸ்புல்லா படைகள் பணயக்கைதிகளாக கைது செய்ததையடுத்து லெபனானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையே யுத்தம் நடைபெற்றுக்கொண்டஉள்ளது. யூன் 25ல் ஹமாஸ் இயக்கத்தினர் இஸ்ரேலிய இராணுவவீரரை பணயக்கைதியாக்கி வைத்திருப்பது தெரிந்ததே.


## ஈரான் மீது தாக்குதல் சாத்தியமில்லை : ரஷ்யா



ஈரான் யுரேனியம் செறிவூட்டலை நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்திவரும் அணுசக்தி நாடுகள் அதன்மீது இராணுவ நடவடிக்கை எடுப்பதற்கு ஒப்புக்கொள்ளவில்லை என்று ரஷ்ய அயலுறவு அமைச்சர் செர்கி லாவ்ரோவ் கூறியுள்ளார். மொஸ்கோவில் இருந்து வெளிவரும் நீசாஷசிமயா கெசட்டா என்ற நாழிதழுக்கு அளித்த பேட்டியில் எந்த நிலையிலும் ஈரான் மீது இராணுவ நடவடிக்கை எடுக்கும் சாத்தியம் இல்லை என்று லாவ்ரோவ் கூறியுள்ளார். வியன்னாவில் அண்மையில் நடந்த 5 அணு வல்லரசுகள் மற்றும் ஜேர்மனி ஆகியவற்றின் கூட்டத்தில் ஈரான் மீது இராணுவ நடவடிக்கைக்கு ஒப்புக் கொள்ளப்படவில்லை என்று லாவ்ரோவ் தெரிவித்தார்.

ஈரான் அணுச்செறிவூட்டலை நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தும் அதே வேளையில் அதற்கு மாற்றாக சில திட்டங்களை அளிப்பது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. சர்வதேச அணுசக்தி கண்காணிப்பு முகாமையின் முடிவின்படி ஈரான் தனது அணு ஆராய்ச்சித் திட்டத்தை நிறுத்த வேண்டும். அவ்வாறு அது நிறுத்தும் பட்சத்தில் அதற்கு எதிராக ஐ.நா பாதுகாப்பு பேரவையில் நிறைவேற்றப்பட்ட நடவடிக்கைத் தீர்மானம் நடைமுறைப்படுத்தப்படாது என்றும் லாவ்ரோவ் கூறியுள்ளார்.

## கிழக்கு தீமோரில் உள்நாட்டு கலவரம்



இந்தோனேசியாவில் இருந்து பிரிந்து தனிநாடான கிழக்கு தீமோரில் உள்நாட்டு கலவரம் நடந்துவருகிறது. மே மாதம் 2 வார காலமாக நடந்துவரும் இக்கலவரத்தில் இராணுவத்தினர் உட்பட ஏராளமானோர் உயிரிழந்துவிட்டனர். இந்நிலையில் கலவரத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளை அவுஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் அலெக்சாண்டர் டவுனர் பார்வையிட்டுள்ளார். அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கிழக்கு தீமோரில் அமைதியை நிலைநாட்ட ஐ.நா படைகளை நிறுத்த வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார். கிழக்கு தீமோர் மக்களை பாதுகாக்க நீண்டகால அடிப்படையில் படைகளை நிறுத்தி வைக்க அவுஸ்திரேலியா தயாராக உள்ளது என்றும் எனினும் ஐ.நா தலைமையின் கீழ் செயல்படவே விரும்புகிறோம் என்றும் அவர் மேலும் கூறினார்.

## வியட்நாமுடன் அமெரிக்கா இராணுவ உறவு

வியட்நாம் நாட்டுக்கு அமெரிக்க இராணுவ மந்திரி றொனால்ட் ரம்ஸ்பீல்டு சென்று இருந்தார். அந்த நாட்டுக்குச் சென்ற 2வது அமெரிக்க இராணுவ மந்திரி இவர். தீவிரவாதத்துக்கு எதிரான போரை நடத்துவதற்காக ராணுவ உறவை வைத்துக் கொள்ள தேர்ந்தெடுத்த பல ஆசிய நாடுகளில் வியட்நாமும் ஒன்று ஆகும். வியட்நாம் போர் முடிந்து 31 ஆண்டுகளுக்குப் பின்பு தூதரக உறவு சீராகி 11 ஆண்டுகளுக்குப் பின்பு வியட்நாமுடன் அமெரிக்கா இராணுவ உறவை ஏற்படுத்திக் கொண்டு இருக்கின்றது. இது தொடர்பாக ரம்ஸ்பீல்டு வியட்நாம் இராணுவ் மந்திரி பாம்வான் பிராவைச் சந்தித்துப் பேசினார். பிரதமர் பாம்வான் கையையும் சந்தித்தார்.



## கிரீஸில் ஹெலிகொப்டரில் கைதிகள் தப்பியோட்டம்

கிரீஸ் நாட்டில் கடத்தல், வங்கிக்கொள்ளை ஆகிய குற்றங்களில் ஈடுபட்டதற்காக வஸ்சிலீஸ் பலேக்கோஸ் டாஸ் என்பவருக்கு 25 ஆண்டுகள் ஜெயில் தண்டனை விதிக்கப்பட்டது. அவர் எதென்ஸ் நகரில் உள்ள கொரிடல்லாஸ் சிறையில் அடைக்கப்பட்டு இருந்தார். 40 வயதான இவர் சில வாரங்களுக்கு முன் சிறையில் இருந்து தப்பிக்க தனது தம்பியின் உதவியை நாடினார். அவரது தம்பியும் ஒரு கிரிமினல் தான். அவர் ஒரு ஹெலிகொப்ரரில் ஏறி அதன் விமானியை துப்பாக்கி முனையில் மிரட்டி சிறைக்குள் தரையிறங்கும்படி கட்டாயப்படுத்தினார். ஹெலிகொப்ரர் சிறையில் இறங்கியதும் வஸ்சிலீசும் அவரது நண்பரான இன்னொரு கைதியும் அதில் ஏறி தப்பினர். பின்பு அருகில் உள்ள இடுகாட்டில் ஹெலிகொப்ரர் இறக்கப்பட்டு கைதிகள் முன்கூட்டியே தயாராக வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளில் தப்பி ஓடிவிட்டனர். திடீர் சோதனைக்காக அமைச்சரக அதிகாரிகள் தான் ஹெலிகொப்ரரில் வந்து இறங்கியிருக்கிறார்கள் என்று ஜெயில் அதிகாரிகள் நினைத்துவிட்டனர். ஆனால் கைதிகள் எளிதில் தப்பிவிட்டனர்.

# உலகச் செய்திகள்

## ஈராக் செல்ல மறுத்த அமெரிக்க இராணுவ அதிகாரி மீது வழக்கு

ஈராக் போர் சட்டத்துக்கு புறம்பானது என்பதால் அங்கு சென்று போர் புரிய மறுத்த அமெரிக்க இராணுவ அதிகாரி மீது இராணுவ கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டு உள்ளது. அவர் பெயர் எக்ரன் வடாடா. அவர் ஈராக் போரை சட்டத்துக்கு புறம்பானது என்றும் அதில் கலந்துகொண்டால் போர்க்குற்றவாளியாக என்னை கருதச் செய்யும் என்றும் கூறி ஈராக் செல்ல மறுத்துவிட்டார். அமெரிக்க இராணுவம் அவர் மீது இராணுவ கோர்ட்டில் வழக்கு தொடர்ந்துள்ளது. கடந்த ஜனவரி மாதமே அவர் பதவி விலக விரும்பினார். ஆனால் அவரது ராஜினாமாவை இராணுவம் ஏற்க மறுத்துவிட்டது. ஆப்கானிஸ்தானில் போர் புரிய விரும்பிய அவர் ஈராக்கில் போர் புரிய மறுத்துவிட்டார்.

## மெக்சிக்கோ முன்னாள் அதிபர் கைது



மெக்சிக்கோவின் முன்னாள் அதிபர் லூயிஸ் எஷிவெர்ரியா (84) ஜூலை 2ல் கைது செய்யப்பட்டு வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். இவர் 1970 முதல் 1976 வரை அதிபராக பதவி வகித்தவர். 1968 இல் இவர் உள்துறை அமைச்சராக இருந்த போது மெக்சிக்கோ சிற்றியில் அரசுக்கு எதிராக போராட்டம் நடத்திய கிளர்ச்சியாளர்களை ஈவிரக்கமின்றி அடக்க பாதுகாப்பு படையினருக்கு உத்தரவிட்டு உள்ளார். இச்சம்பவத்தில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

இத்துடன் 1971 ஜூன் 10ம் திகதி நடைபெற்ற ஒரு சம்பவத்திலும் பாதுகாப்பு படையினரால் குறைந்த பட்சம் 12 பேர் கொல்லப்பட்டனர். ஆனால் இச்சம்பவத்திற்கும் எஷிவெர்ரியாவிற்கும் தொடர்பு இல்லை என்று கடந்த ஆண்டு அவர் மீதான வழக்கை தள்ளுபடி செய்தது நீதிமன்றம். இவ்விரு சம்பவங்களுக்கும் தனக்கும் தொடர்பு இல்லை என்று எஷிவர்ரியாவும் மறுத்து வந்துள்ளார்.

இருப்பினும் மாணவர் படுகொலையில் தொடர்பு இருப்பதாக கூறி மீண்டும் அவரை கைது செய்து வீட்டுக்காவலில் வைத்துள்ளதாக அரசு தகவல் கள் கூறுகின்றன. புதிய அதிபரைத் தேர்ந்தெடுப்பதற்காக தேர்தல் நடைபெறவுள்ள வேளையில் முன்னாள் அதிபர் கைது செய்யப்பட்டு இருப்பது குறிப்பிடத் தக்கது.

## அமெரிக்காவில் ஓரின சேர்க்கை திருமணங்களை தடை செய்ய புஷ் தீவிரம்




அமெரிக்காவில் ஓரின சேர்க்கை திருமணங்களை தடை செய்ய புஷ் தீவிரமாக இருக்கிறார். ஓரின சேர்க்கை திருமண தடை மசோதா மீது செனட் சபையில் யூன் 4ம் திகதி வாக்கெடுப்பு நடந்தது. அமெரிக்காவில் ஓரினச் சேர்க்கை திருமணங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. இத்தகைய திருமணங்களுக்கு பாராளுமன்றம் மற்றும் சட்டசபைகளால் தடைவிதிக்க முடியாது என்று மசாசுசெட்ஸ் கோட் கடந்த 2003ம் ஆண்டு தீர்ப்பளித்தது. அதைத் தொடர்ந்து 2004ம் ஆண்டு மே மாதம் அமெரிக்காவில் முதன்முறையாக ஓரினச்சேர்க்கை திருமணம் நடைபெற்றது. இத்திருமணங்களை தடை செய்ய 2004ம் ஆண்டு செனட் சபையில் தாக்கல் செய்யப்பட்ட மசோதா தோல்வியடைந்தது.

இந்நிலையில் புஷ்ஷின் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த கொலராடோ மகாண செனட் உறுப்பினர் வேனே அல்லாட் இதற்கான மசோதாவை செனட் சபையில் தாக்கல் செய்துள்ளார். இம்மசோதா ஓரினச் சேர்க்கை திருமணங்களுக்கு தடை விதிக்கும் வகையில் அரசியல் சட்ட திருத்தம் செய்ய வகை செய்கிறது. மேலும் அமெரிக்காவில் உள்ள 38 மாகாணங்களுக்கும் இத்தடையை அமுல்படுத்த வகை செய்கிறது. இம்மசோதா செனட் சபையில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இம்மசோதா வெற்றிபெற 67 ஓட்டுக்கள் தேவையாக இருந்தது. ஆனால் அத்தனை ஓட்டுக்கள் கிடைக்கவில்லை.



மசோதாவை வெற்றிபெறச் செய்ய புஷ் தீவிரமாக இருந்தார். இது தொடர்பாக வானொலியில் அவர் பேசினார். வெள்ளை மாளிகையிலும் அவர் உரையாற்றினார். ஓரினச் சேர்க்கை திருமணங்களை தடை செய்ய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். அமெரிக்காவில் பாரம்பரியத்தில் நம்பிக்கை கொண்ட பாதிக்கு மேற்பட்டவர்கள் இத்திருமணங்களை தடைசெய்ய ஆதரவு தெரிவித்துள்ளனர். மேலும் புஷ்ஷின் செல்வாக்கு சரிந்துள்ளதால் வரும் நவம்பர் மாதம் பாராளுமன்ற தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் மேற்கண்டவர்களின் ஓட்டுக்களை பெற்று மீண்டும் ஆட்சியை பிடிப்பதற்காக புஷ் இத்தடைச் சட்ட மசோதா கொண்டுவருவதில் ஆர்வமாக உள்ளதாக அரசியல் பார்வையாளர்கள் கருதுகின்றனர். இருப்பினும் இம்மசோதா நிறைவேற்றப்படுவது மிகவும் கடினமானதாகவே உள்ளது. பாராளுமன்ற இரு அவைகளிலும் மூன்றில் இரு பங்கு பெரும்பாண்மை இருந்தால் தான் மசோதா நிறைவேற்றப்படும். அதன் பிறகு 38 மாகாண சட்டசபைகளும் இதற்கு ஒப்புதல் அளிக்க வேண்டும். அதன்பிறகு தான் தடை அமுலுக்கு வரும்.

இம்மசோதா செனட் சபையில் ஜூன் 8 அன்று தோல்வியை தழுவியது. இது ஒரு ஓட்டு வித்தியாசத்தில் தோற்றுவிட்டது.

## ஆக்கிரமிப்பு பலஸ்தீனத்தில் இராணுவ தாக்குதலை இஸ்ரேல் நிறுத்த வேண்டும் 28 நாடுகள் கோரிக்கை



ஆக்கிரமிப்பு பலஸ்தீனத்தில் இராணுவ தாக்குதலை இஸ்ரேல் உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும் என்று ஐ.நா மனித உரிமை கவுன்சில் கூட்டத்தில் 28 நாடுகள் கோரிக்கை விடுத்துள்ளன. கைது செய்யப்பட்டுள்ள பலஸ்தீன அமைச்சர்கள் மற்றும் எம் பிக்களையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் எனவும் ஐ.நா கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டது. பலஸ்தீனத்தில் நிலவும் உண்மை நிலவரத்தை அறிய உண்மை அறியும் குழுவையும் விரைவில் அனுப்புவது எனவும் அக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

ஐ.நா மனித உரிமைக் கவுன்சில் கூட்டத்தில் பலஸ்தீனத்தில் இராணுவ தாக்குதலால் மக்கள் படும் அவதி குறித்து கவலை தெரிவிக்கப்பட்டது. மோசமான நிலையில் பலஸ்தீனர்கள் மீது இஸ்ரேல் இராணுவம் தாக்குதல் தொடர்ந்ததை அடுத்து நிலமை மிகவும் மோசமடைந்துள்ளது. இஸ்ரேலுக்கு எதிரான தீர்மானத்தை ஆதரித்து இந்தியா உட்பட 28 நாடுகள் வாக்களித்தன. 11 நாடுகள் எதிர்த்து வாக்களித்தன. 5 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

சர்வதேச மனித உரிமைச் சட்டத்தை மதித்து அனைத்து உறுப்பு நாடுகளும் நடக்க வேண்டும், குற்றவாளிகளை ஜெனிவா ஒப்பந்தத்தின் படி மரியாதையாக நடத்த வேண்டும் என பாகிஸ்தான் விரைவு தீர்மானத்தை கொண்டுவந்துள்ளது. இத்தீர்மானத்தை ஆதரித்து 28 நாடுகள் வாக்களித்தன. இக்கூட்டத்தில் பங்கேற்ற இஸ்ரேல் தீர்மானத்திற்கு எதிராக வாக்களிக்கும்படி கோரியது.

# HARTEX

ESTABLISHED 1969

THE GREAT OUT DOORS

- COMBAT - PULLOVERS - MAP CASES - THERMAL UNDERWEAR
- RAINWEAR - BODY WARMERS - SHORTS - COMPRESSORS BAGS
- CLOTHING - BOOTS - COOKWARE - MONEY BELTS
- HIKING BOOTS - HAMMOCKS - CUTLERY SETS
- GLOVES - HEADWEAR - PLATES - WEBBING - HIKING BOOTS



Competitive prices



55 VICTORIA ROAD
RUISLIP MANOR
MIDDX, HA4 9BS
TEL: 01895 634244

321 NORTHOLT ROAD
SOUTH HARROW
MIDDX, HA2 8JA
TEL: 020 8864 3333

OPEN 7 DAYS

**Advocates - Lawyers - Solicitors**

Specialise in Buy & Sell Off-Licence shops & Resturants Including Alcohol Licensing

அற்ககோல் லைசன்ஸ் உட்பட ஓப் லைசன்ஸ் கடைகளையும் உணவகங்களையும் வாங்குவதிலும் விற்பதிலும் தேர்ச்சி பெற்றவர்கள்.

also Immigration, Conveyancing, Divorce, Wills & Probate, Civil Litigation

020 8206 3530

595 Kenton Rd,
kenton, Middlesex
HA3 9RT

Alliance SOLICITORS

www.alliance-solicitors.com

To Advertise 07957681944

**Morjarias Toys & Gifts**



Summer Toys
Stationery
Soft Toys
Murtis
Tools – Hardware
Rizla – Duracell
Toiletries
Photo Frames



Party Goods
Household Items
Candles - Giftware
Panasonic Batteries
Pocket Money Toys
Helium Balloons
£ - Pound Lines - £

Trade Only

Morjarias House
North Circular Road
London NW10 7UD
☎ 0870 333 6898
www.toysgifts.biz

| Opening Times | | |
|---|---|---|
| Mon to Fri | 10am - 6pm | |
| Late Night Thur | 10am - 8pm | |
| Saturday | Closed | |
| Sunday | 9am - 3pm | |

To Advertise 020 8952 5677

Quality Japanese Car Parts

Discount Prices

Japarts

08450 66 44 22

www.japarts.co.uk

J K SHAH

J.K. Shah (B.A.Hons) F.C.C.A

Chartered Certified Accountant
Accountants, Tax and Business Advisers
Complete Accounting Services

ACCOUNTANCY
Accounts prepared for Sole Traders, Partnerships & Limited Companies

TAXATION
All kinds of taxation matters

VAT & BOOK-KEEPING
Competitive Book-keeping and VAT Service, Using Computerised System

PAYROLL
Comprehensive Computerised Payroll Services

ACCA

572-574 Romford Road, Manor Park, London E12 5AF
Tel: 020 8553 2436 Fax: 020 8514 6939
E-mail: info@jkshah.com
Internet: www.jkshah.com

furniture essentials

Sofas, Sofabeds & Dining Furniture

EXTRA 10% off our Current Sale Prices with this Advert.

13 Brentside Works, North Cicular Rd
Wembley NW10 7SX
Call: 020 8965 8588

**London Airport Taxi Service**

0870 042 8886 BAtransfer.COM

Transfers To and From All London Airports to Anywhere in UK

£2.00 Off PER JOURNEY WHEN YOU HAND OVER THIS VOUCHER TO DRIVER

விமானநிலையம் செல்லவும் அழைத்து வரவும் அனுபவம் பெற்றவர்கள்.

# MANUFACTURING LTD

T:020 8571 0043/020 8574 2571 F:020 8843 0746
220 Uxbridge Road, Southhall, Middx UB1 3DZ

mbs

-Durable-Unbeatable Price-Free Design & Delivery-5 Years Guarantee-All Units Made from 18mm

Heating & Plumbing supplies, Bathroom Showers & Sanitary Ware, Fittied Kitchens, Bedroom Furniture, Marble & Granite Floors, Worktops, Tiles & Other Products

e-mail: mbsmanufacturing@btconnext.com
mbsgroupcompanies.com

# V.J.CARPETS

110 The Green, Southall Middlesex, UB2 4BQ
Tel: 020 8574 9033

SPECIALOFFERS

FREE UNDERLAY WORTH £3.57 SQ.MTR WITH CARPETS OVER 5.96 S.Q. MTR

WE ARE NOW OFFERING FREE FITTING, FREE MEASURING FREE ESTIMATING & FREE LOCAL DELIVERY

HEAVY DOMESTIC CUT PILE GRAPHIC
WAS £10.75 sq.mtr
NOW £8.36 sq.mtr

CONTRCT CORD BUILT IN UNDERLAY OR WOVENBACK
£2.99YD £3.58 SQ MTR

ASCOT CUT PILE GRAPHIC
WAS £10.75 SQ.MTR
NOW £8.36 SQ. MTR

HEAVY PRINTS BUILT IN UNDERLAY
was £6.99 SQ.MTR
NOW £4.77 SQ .MTR

HEAVY DOMESTIC WILTONS
WAS £14.34 SQ.MTR.
NOW £10.75 SQ.MTR.
LIMITED STOCK

HEAVY DOMESTIC TWIST
WAS £11.55 SQ. MTR
NOW £9.55 SQ. MTR.

FITTED FREE ON ALL CARPETS OVER £4.77 SQ. MTR.

THIS IS JUST A SMALL EXAMPLE OF A LARGE SELECTION. WE WELCOME YOU TO VISIT OUR STORE ROOM OR CALL US

TEL.020 8574 9033

10% EXTRA DISCOUNT

OPEN: MON - SAT
9.00AM TO 6.00PM

skylord travel

# Skylord Travel Special Offers

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Bangalore | from £325 | Bombay | from £265 | Chennai | from £325 |
| Calcutta | from £365 | Colombo | from £380 | Delhi | from £265 |
| Hyderabad | from £370 | Trivandrum | from £325 | | |

Above Fares are nett exclude taxes & Fuel Surcharges

Eastcote : 020 8582 1111 London : 020 7388 8111 Southall : 020 8537 1111